பக்கங்கள் : பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆனி 14 செவ்வாய்க்கிழமை (28.06.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :214

# போராளிகளின் வாகன அணி மீதான தாக்குதலுக்குப் புலிகள் கடும் கண்டனம்!

## கண்காணிப்புக்குழுவுக்கு தமிழ்ச்செல்வன் கடிதம்

கிளிநொச்சி,ஜூன்28

**கடந்த ஞாயிறன்று சுமார் ஐம்பது விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளை ஏற்றிக்கொண்டு, இராணுவத்தின் பாதுகாப்போடு சென்ற வாகனத் தொடரணி மீது வெலிகந்தையில் நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் கடும் கண்டனம் தெரிவித்திருக்கிறார்கள்.**

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கண்டனமும் கடும் அதிருப்தியும் தெரிவிக்கும் கடிதம் ஒன்றை விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினருக்கு அனுப்பிவைத்திருக்கின்றார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் முக்கிய விடயங்கள் வருமாறு:-

கடந்த 26 ஜூன் 2005 அன்று வெலிகந்தைப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

இத் தரைவழிப்பயணத்தின்போது, முன்னர் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகளுக்கு முரணான வகையில் இலங்கை இராணுவத்தினர் நடந்துகொண்டவிதம் தொடர்பாக எங்களுடைய கடுமையான அதிருப்தியையும், கண்டனத்தையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

இம்மாத முற்பகுதியில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்த மட்டக்களப்பிற்கான எமது போராளிகளின் பயணத்தின்போது இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் ஏனைய ஆயுதக்குழுக்களுடன் சேர்ந்து அத்தொடரணியை வெலிகந்தைப் பகுதியில் வைத்துத் தாக்குவதற்குத் திட்டமிட்டிருந்தார்கள் என எமக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவல்களின் பின்னர் இந்தப் பயணம் இடைநிறுத்தப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக எமது போராளிகளின் பயணம் இடைநிறுத்தப்பட்ட பின்னர் இராணுவத்தினர் மறறும் கண்காணிப்புக் குழுவினரது வாகனப் பாதுகாப்பைவிட மேலதிகமாகக் குறிப்பிட்டதொகை இராணுவத்தினர் எமது உறுப்பினர்கள் பயணம் செய்யும் வாகனத்திலும் இருப்பார்கள் என்ற உடன்பாட்டுக்கு இரு தரப்பினரும் வந்ததையும் நீங்கள் அறிவீர்கள். எமது போராளிகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில் ஏன்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஹெல உறுமயவும் வழக்கு?

கொழும்பு,ஜூன்28

பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கைக்கு எதிராக ஜாதிக ஹெல உறுமயவும் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு முடிவு செய்துள்ளது.

அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வண. அத்துரலியே ரத்ன தேரர் நேற்று ஊடகங்களுக்கு இதனைத் தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்புக்கு எதிரான கட்சிகளுடன் கூட்டுச்சேர்ந்து ஜாதிக ஹெலஉறுமய நாடு தழுவிய ரீதியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தும். அக்கட்சிகளுடன் இணைந்து கூட்டு முன்னணியொன்றை ஏற்படுத்திக்கொள்வது தொடர்பாகவும் கட்சித் தலைவர்கள் ஆலோசித்து வருகின்றனர் என்றும் அவர் கூறினார். (க)

## பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டுக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றில் நேற்று வழக்கு

கொழும்பு,ஜூன்28

இலங்கை அரசும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் செய்துகொண்டுள்ள பொதுக் கட்டமைப்பு உடன்படிக்கை செயற்படுத்தப்படுவதற்கு எதிராக உடனடியாக இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றை விதிக்கும்படியும் அந்த உடன்பாடு சட்ட விரோதமானது என அறிவிக்கும்படி கோரியும் ஜே.வி.பி. சார்பில் நேற்றுக் கொழும்பு மாவட்ட நீதி மன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு எதிர்வரும் 30ஆம் திகதி நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர் எனக் கூறப்படும் - ஜே.வி.பியின் மேல்மாகாணசபை முன்னணி உறுப்பினரும் களுத்துறை மாவட்டதைச் சேர்ந்தவருமான - ஏ.ரி.எஸ்.ஜி.வாஸ் குணவர்த்தன என்பவரின் சார்பில் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான சுனில ஹந்துன்நெத்தி இந்த வழக்கை கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் நேற்றுத் தாக்கல்செய்தார்.

வழக்கில் எதிர் மனுதாரர்களாக, மேற்படி பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தில் அரசு சார்பில கைச்சாத்திட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு, நல்லிணக்க அமைச்சின் செயலாளர் எம்.எஸ்.ஜயசிங்க, புலிகள் சார்பில் ஒப்பமிட்ட புலிகளின் அபிவிருத்தித் திட்டமிடல் செயலகப் பிரதிப் பணிப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சிவராம் படுகொலை தொடர்பான அடையாள அணிவகுப்பு ஒத்திவைப்பு

கொழும்பு,ஜூன்28

ஊடகவியலாளர் தர்மரத்தினம் சிவராம் படுகொலைச் சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டுள்ள - புளொட் அமைப்பின் இராணுவப் பிரிவுப் பொறுப்பாளர் எனக் கருதப்படும் - ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தராஜா (பீற்றர்) அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துவதற்காக நேற்றுப் பலத்த காவலுக்கு மத்தியில் முகம் மூடி மறைக்கப்பட்ட நிலையில் கடுவெல நீதிமன்றத்துக்குக் கொண்டுவரப்பட்டார்.

ஆனால், அடையாளம் காட்டவேண்டிய சாட்சிகளுள் ஒருவர் நேற்று நீதிமன்றுக்குச் சமுகமளிக்காததால் அடையாள அணிவகுப்பை எதிர்வரும் 5ஆம் திகதி நடத்த உத்தரவிட்டார் கடுவெல மேலதிக நீதிவான் லக்மால் விக்கிரமசூரியா.

இந்தச் சம்பவம் தொடர்பாக வசந்த குசல் பெரேரா, பிரசன்னா குமுது இரட்ணாயக்கா, ரவி

(12ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஐ.தே.கட்சி இரட்டை நிலைப்பாடு

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும மீளகட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்காக விடுதலைப் புலிகளோடு அரசு பொதுக்கட்டமைப்பு ஏற்பாடு ஒன்றைச் செய்துகொண்ட விவகாரம தொடர்பாக இரட்டை வேட நிலைப்பாட்டைப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி வெளிப்படுத்திவருகின்றது.

ஒரு புறம் அந்தக் கட்டமைப்புக்குக் கொள்கை ரீதியாக முழு ஆதரவு தெரிவித்துள்ள அக்கட்சி, பொதுக்கட்டமைப்பு மூலம் நாட்டின் இறைமையை மீறுவதற்கு அரசு இடமளித்துள்ளது என்றும் குற்றம் சுமத்தியிருக்கின்றது.

பொதுக்கட்டமைப்பில் சிங்கள சமூகம் முற்றாகவே புறக்கணிக்கப்பட்டிருக்கும் அதேவேளை, முஸ்லிம்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை என்றும் ஐக்கிய தேசியக் கட்சி கூறியுள்ளது. அக்கட்சியின் இந்த நிலைப்பாட்டை

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. அம்பாறை முஸ்லிம் பகுதிகள் நேற்று ஹர்த்தாலால் முடங்கின!

அம்பாறை,ஜூன்28

பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களின் உரிமைகள் புறக்கணிக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மட்டக்களப்பு, அம்பாறை, மாவட்டங்களிலுள்ள முஸ்லிம் பகுதிகளில் நேற்று முழுமையான ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதனால், இரு மாவட்டங்களிலும் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது.

கிழக்கு முஸ்லிம் அமைப்புகளின் ஒன்றியம இந்த ஹர்த்தாலுக்கான அழைப்பை விடுத்திருந்தது. அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, சம்மாந்துறை, கல்முனை, மருதமுனை, சாய்ந்தமருது, பொத்துவில் ஆகிய பகுதிகள் அனைத்தும் முற்றாகச் செயலிழந்திருந்தன. அதேபோன்று மட்டக்களப்பு மாவட்டத்திலும் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக வாழும் பகுதிகள் அனைத்தும் நேற்று முற்றாக ஸ்தம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## 'ரவ்பன்' அமைப்பின் தலைவர் நேற்று குடாநாட்டுக்கு விஜயம்

யாழ்ப்பாணம்,ஜூன்28

யாழ். மாவட்டத்தில் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை ஆராய்வதற்காக 'ரவ்பன்' அமைப்பின் தலைவர் மனோதித்த வெல நேற்று யாழ்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டார்.

அவருடன் வடிகாலமைப்பு மற்றும் நீர்விநியோக அமைச்சின் தலைவர் தெசப்பிரிய ஹேவகே யும் வந்திருந்தார்.

நேற்றுக்காலை வந்துசேர்ந்த அவர் யாழ். செயலகத்தில் பல்வேறு தரப்பினரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

பிரதேச செயலர் மற்றும் வங்கி அதிகாரிகளுடன் நடந்த முதலாவது கலந்துரையாடலிலும் - உள்ளூர் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் நடந்த இரண்

(12ஆம் பக்கம் பார்க்க)

## உஷார் நிலையில் அரச அச்சகம்!

கொழும்பு,ஜூன்28

அரச அச்சகத் திணைக்களம் உஷார் படுத்தப்பட்டுள்ளது. திணைக்களத்தின் சகல பாதுகாப்பு நடவடிக்கைகளும் விமானப் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்றத்தில் அரசு பெரும்பான்மையை இழந்துள்ள நிலையில் எந்த நேரத்திலும் திடீர் பொதுத்தேர்தல் ஒன்றுக்கு ஜனாதிபதி அறிவிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கு முன்னோடியாகவே அரச அச்சகத் திணைக்களம் உஷார் படுத்தப்பட்டுள்ளது. திணைக்கள ஊழியர்கள் அனைவரும் எந்தச் சமயத்திலும், எந்தப் பணியையும் ஏற்றுச் செய்யக் கூடிய வகையில் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

தேர்தல் ஒன்றை நடத்தும்போது தேர்தல் அதிகாரிகள், தேர்தல் முகவர்கள், பொலீஸ் அதிகாரிகள் மற்றும் வாக்காளர்களுக்கு வழங்கப்படவேண்டிய அறிவுறுத்தல்களும், ஆலோசனைகளும் அடங்கிய விவரங்கள் இப்பொழுது அச்சிடப்பட்டுவருகின்றன.

அறிவித்தல் கிடைத்தவுடன் வாக்காளர் அட்டைகளை அச்சிடவும் அச்சகத் திணைக்களம் தயாராகவிருக்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டது.

## யாழ். பல்கலை பேரவைக்கு 11 உறுப்பினர்கள் நியமனம்

யாழ்ப்பாணம்,ஜூன்28

யாழ். பல்கலைக்கழகப் பேரவைக்கு வெற்றிடமாக இருந்த 11 இடங்களுக்கு புதியவர்களை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு நேற்று நியமித்துள்ளது.

இந்தப் பேரவையின் உறுப்பினர்களை 11 பேரின் பதவிக்காலம் கடந்த மாதம் 15ஆம் திகதி பூர்த்தியடைந்ததால், பேரவையின் கூட்டங்களை நடத்த முடியாதநிலை ஏற்பட்டிருந்தது.


புதியவர்களை நியமித்துப் பட்டியலை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு யாழ். பல்கலைக்கழகத்துக்கு நேற்று அனுப்பியுள்ளது.

புதிய உறுப்பினர்கள் விவரம் வருமாறு:-

பேராசிரியர் வி.ஆறுமுகம்,எஸ்.ராசநாயகம், கே.பூரணச்சந்திரன், பி.உ.ரோமகேஸ்வரன், செல்வி சாந்தா அபிமன்னசிங்கம், டாக்டர் ஆ.தெய்வேந்திரன், யாழ். அரச அதிபர் கே.கணேஷ், திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம், பேராசிரியர் கோபாலகிருஷ்ண ஐயர், வண. யஸ்ரின் ஞான

(12ஆம் பக்கம் பார்க்க)





ஊர்காவற்றுறையில் நேற்று இடம்பெற்ற போராட்டத்தில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. இதில் இடம்பெற்ற பேரணியையும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கொடும்பாவி எரிக்கப்படுவதையும், ஐரோப்பிய ஒன்றியத்துக்கான மகஜர் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனனிடமும், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கான மகஜர் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவனேசனிடமும் கையளிக்கப்படுவதையும் படங்களில் காணலாம். படங்கள்: பிரபா






தென்மராட்சியில் நேற்று இடம்பெற்ற போராட்டத்தில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. இதன்போது இடம்பெற்ற பேரணியையும், வீதி மறியலில் பொதுமக்கள் ஈடுபடுவதையும், பிரதேச சபை செயலாளர் ந.பாலச்சந்திரன், உசன் இராணுவ முகாம் சிவில் அதிகாரி மேஜர் விஜயரட்ண ஆகியோரிடம் மகஜர்கள் கையளிக்கப்படுவதையும் படங்களில் காணலாம். படங்கள்: எஸ்.எஸ்.ரூபன்

# படையினரை வெளியேறக்கோரி ஊர்காவற்றுறையில் நேற்றுப் பேரணி

ஊர்காவற்றுறை,ஜூன்28

தீவுப் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினரை அங்கிருந்து வெளியேறக்கோரி ஊர்காவற்றுறையில் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான கி.சிவனேசன், திருமதி பத்மினி சிதம்பரநாதன் உட்பட்ப் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், மாணவர்கள், ஆசிரியர்கள் கூட்டுறவாளர்கள், அனலைதீவு, எழுவைதீவு, நயினாதீவு, புங்குடுதீவு, வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய தீவுப் பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் என சுமார் ஐயாயிரத்துக்கும் அதிகமானோர் நேற்றைய ஆர்ப்பாட்டப் பேரணியில் பங்கேற்றனர். தீவக மக்கள் அபிவிருத்தி நலன் காப்பகம், தீவக பொது அமைப்புக்களின் ஒன்றியம் என்பன இந்தப் பேரணியை ஒழுங்குசெய்திருந்தன.

நேற்று முற்பகல் 11 மணியளவில் கரம்பொன் பால்க்காட்டுச் சந்தியில் ஆரம்பமான பேரணி, அங்கிருந்து புனித செபஸ்தியார் ஆலயச் சந்தியை வந்தடைந்தது.

பேரிகைகள் முழங்க 'சிங்கள அரசே உனது படைகளை மீளப்பெறு', 'தேசவிரோத சக்திகளே தீவகத்தை விட்டு வெளியேறுங்கள்' எனக் கோஷமிட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் கரம்பொன் செபஸ்தியார் தேவாலயச் சந்தியை வந்தடைந்தனர். அவர்கள் அங்கு முகாமிட்டுள்ள ஈ.பி.டி.பியினரைத் தீவகத்தில் இருந்து உடனடியாக வெளியேறுமாறுகோரி உரக்கக் கோஷ மிட்டனர்.

ஈ.பி.டி.பி. அமைப்பின் முகாம் பகுதி கடற்படையினரதும், பொலீஸாரினதும் பலத்த பாதுகாப்புக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. பெரும் எண்ணிக்கையான கலகம் அடக்கும் பொலீஸார் அங்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.

பின்னர் ஊர்காவற்றுறை - சுருவில் வீதியூடாக நகர்ந்த பேரணி, ஊர்காவற்றுறைச் சந்தியை வந்தடைந்தது. அங்கு ஆர்ப்பாட்டப் பேரணியில் பங்குகொண்ட அனைவரும் கைகளில் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் உருவப் படத்தைத் தாங்கியவாறு தமது கைகளை உயர்த்தி 'எமது நிலம் எமக்கு வேண்டும்', 'சிங்களப் படையே உடன் தீவகத்தை விட்டு வெளியேறு', 'ஈ.பி.டி.பி. தேசவிரோதக் கும்பலே தீவகத்தை விட்டு வெளியேறு', 'எங்கள் தலைவர் பிரபாகரனே' 'இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை விடுதலைப் புலிகளிடம் கையளி' என்ற கோஷங்களை எழுப்பினர்.

பின்னர் யாழ். - ஊர்காவற்றுறை வீதி வழியாகப் பயணித்த பேரணி, தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையை வந்தடைந்தது. அங்கு தீவகப் பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவரும், யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஊடகப் பேசசாளருமான ப.கனகலிங்கம் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. நாடாளுமன்ற உறுபபினர்களான கி.சிவனேசன், திருமதி பத்மினி சிதம்பரநாதன், தீவகம் வடக்கு பொது அமைப்புக்களின் பிரதிநிதி எஸ்.முத்துக்கிருஷ்ணன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து ஐரோப்பிய நாடாளுமன்றத் தலைவருக்கான மகஜரை தீவகம் வடககு பொது அமைப்புக்களின் பிரதிநிதியும் ஊர்காவற்றுறை வணிகர் சங்கத் தலைவருமான எஸ்.அஞ்சலோவும் -

வெளிநாட்டுத் தூதுவர்களுக்கான மகஜரை தீவக பொது அமைப்புக்களின் தலைவர் ப.கனகலிங்கமும் - தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனனிடம் கையளித்தனர்.

தமிழீழத் தேசியத் தலைவருக்கான மகஜர் நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவனேசனிடம் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளால் கையளிக்கப்பட்டது.

மகஜர்களைப் பெற்றுக்கொண்ட உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன், மகஜர்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு உடனடியாகவே அனுப்பி வைக்கப்படும் - என்றார்.

ஆர்ப்பாட்டப் பேரணி ஆரம்பமான இடத்தில் இருந்து அறிவிப்பு வாகனத்துக்குப் பின்னால் அமைச்சரும், ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவின் கொடும்பாவி இழுத்து வரப்பட்டது.

இது பின்னர், பேரணியின் முடிவில் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையின் முன்பாக பேரிகை முழங்க - பொதுமக்களின் ஒப்பாரிக்கு மத்தியில் தீககிரையாக்கப் பட்டது.

இதற்கிடையில் - நேற்றைய பேரணியை அடுத்து ஊர்காவற்றுறை நகரப்பகுதி என்பவற்றில் கடற்படையினரும், பொலீஸாரும் பெரும் அளவில் குவிக்கப்பட்டிருந்தனர். போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகளும் அங்கு சமுகமளித்திருந்தனர். (எ-7-16-167)

## பல்கலை ஊழியர் வேலைநிறுத்தம்

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்க உறுப்பினர்கள் இன்று செவ்வாய்க்கிழமை முதல் தொடர்ச்சியான வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

சம்பள முரண்பாடுகள் தொடர்பான கோரிக்கைகளை முன்வைத்தே இப்போராட்டம் நடத்தப்படவுள்ளதாகவும் -

பாதுகாப்பு மற்றும் நீர்விநியோகம் ஆகிய பிரிவுகளின் ஊழியர்களுக்கு வேலைநிறுத்தத்திலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதாகவும் - ஊழியர் சங்கம் தெரிவித்தது (ஒ)

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்28

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கான மாதாந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும், விவசாயக் குழுக் கூட்டமும் இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளன என பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார்.

மேற்படி கூட்டங்கள் கடந்த 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறுவதாகவிருந்து பின்னர் ஒத்திவைக்கப்பட்டமை தெரிந்ததே.(எ)

## இணையத்துக்கு இணையத்தளம்

யாழ்ப்பாணம்,ஜூன்28

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் தனது செயற்பாடுகளை விஸ்தரிக்கும் நோக்குடனும், அவற்றைப் பொது மக்கள் அறிந்து கொள்வதற்கு வசதியாகவும் இணையத்தளம் ஒன்றை உருவாக்கியுள்ளது.

**www.jaffnangos.org** என்ற இணைய முகவரியில் அந்த இணையத்தளத்தினைப் பார்வையிட முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் தயாரிக்கப்படும் மாதாந்த அறிக்கை, யாழ்.குடாநாட்டில் அதனால் செயற்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள், குடாநாட்டில் பல்வேறு நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் திட்டத்தின் விவரங்கள், அவற்றினால் ஏற்படும் சாதக பாதகங்கள் என்பன தொடர்பாக இதில் முழுமையாக அறிந்துகொள்ள முடியுமென இணையத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (8)

## நகைச்சுவை நாடகப் போட்டி விண்ணப்பத் திகதி நீடிப்பு

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்தும் நகைச்சுவை நாடகப் போட்டிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி அடுத்தமாதம் 31 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி என். ஸ்ரீதேவி அறிவித்துள்ளார்.

நாடகங்களை எழுதுவதற்கும், அவற்றை மேடையேற்றுவதற்கும் போதிய கால அவகாசம் வழங்குமாறு நாடக மன்றங்கள் பலவும் கடிதம் மூலம் தம்மிடம் கோரிக்கை விடுத்துள்ளன என்றும் -

இதனை அடுத்து இம்மாதம் 30ஆம் திகதி என முன்னர் அறிவிக்கப்பட்ட விண்ணப்ப முடிவுத் திகதியை ஜூலை 31வரை நீடிப்பதற்கு முடிவுசெய்யப்பட்டதாகவும் - உதவிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (எ)

# மீளக் குடியமர அனுமதிக்கக்கோரி தென்மராட்சியில் நேற்று போராட்டம்

தென்மராட்சி கிழக்கில் மக்களை மீளக் குடியமர அனுமதிக்குமாறுகோரி ஏ-9 வீதியை மறித்து நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெற்றது.

மிருசுவில் வடக்கு, மிருசுவில் தெற்கு, எழுதுமட்டுவாழ் வடக்கு, எழுதுமட்டுவாழ் தெற்கு, கரம்பகம், ஒட்டுவெளி, உசன், கிளாலி மற்றும் முகமாலைப் பகுதி மக்கள் தம்மை தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர அனுமதிக்குமாறு கோரியே இப்பேரணிகளை நடத்தினர்.

இப்பேரணியில் பொது மக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொது மக்களின் பிரதிநிதிகள் என நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

முற்பகல் 10.30 மணிக்கு உசன் கந்தசாமி கோயில் முன்றிலில் ஒன்றுகூடிய மக்கள் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழுள்ள பகுதிகளில் மீளகுடியமர அனுமதிக்கவேண்டும் எனக் கோரியும், சமாதானத்தை வேண்டியும், ஆலயத்தில் வழிபாடு, பிரார்த்தனைகளை மேற்கொண்டனர்.

தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர்களான ந.ரவிராஜ், எம்.கே.சிவாஜிலிங்கம், பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் க.அருந்தவபாலன், பெண்கள் பிரதிநிதி தங்கரத்தினம், இளைப்பாறிய அதிபர் துரைரத்தினம் ஆகியோர் கண்டன உரைகளை நிகழ்த்தினர்.

முற்பகல் 11.45 மணியளவில் ஆலய முன்றிலிருந்து பேரணி ஆரம்பமாகியது, எமது நிலம் எமக்கு வேண்டும் என்ற உரிமைக் கோஷத்தை முழங்கியவாறு சுலோக அட்டைகளையும், பதாகைகளையும் தாங்கிய வண்ணம் பேரணியினர் உசன் இராணுவ முகாமைச் சென்றடைந்தனர்.

அங்கு சிவில் அதிகாரி மேஜர் வியரட்ணவிடம் எமது நிலம் எமக்கு வேண்டும் என்பதை வலியுறுத்தி மகஜர் கையளிக்கப்பட்டது.

அங்கிருந்து உசன் வீதி வழியாக ஏ-9 வீதியை பேரணி வந்தடையவே மிருசுவில் சந்தியில் ஏ-9 வீதியை வழிமறித்து மதியம் 12 மணியளவில் கொதிக்கும் வெய்யிலின் மத்தியில் வீதியின் குறுக்கே அமர்ந்திருந்து உரிமைக் கோஷம் முழங்கினர்.

பேரணி பின்னர் அங்கிருந்து மிருசுவில் கிறிஸ்தவ ஆலயத்தைச் சென்றடைந்தது. நாட்டில் சாந்தியும், சமாதானமும் நிலவவேண்டி அங்கு பிரார்த்தனையும் இடம்பெற்றது.

தொடர்ந்து மகஜர்கள் கையளிக்கும் நிகழவு இடம்பெற்றது.

பேரணி நடைபெற்ற இடங்களில் பெரும் எண்ணிக்கையான கலகம் அடக்கும் பொலஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

மீளக்குடியமரக் கோரி நடத்தப்பட்டு வரும் தொடர் போராட்டங்களில் ஒரு கட்டமாக இப் பேரணி நடைபெற்றது. தீர்வு கிடைக்கும்வரை தொடர்ச்சியான போராட்டங்கள் நடத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இப்பேரணி முடியும்வரை ஏ-9 வீதியூடான போக்குவரத்துகள் ஸ்தம்பிதமடைந்த போதும் பேரணி முடிந்ததும் போக்குவரத்துகள் வழமைக்குத் திரும்பின. (ஒ-74-31-117)

**வழமையாக செவ்வாய்க்கிழமைகள் தோறும் உதயனுடன் வெளிவரும் கல்விச் சுடர் இவ்வாரம் மட்டும் நாளை புதன்கிழமை வெளியாகும் என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகிறோம்.**



உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# பலிக்குமா ரணிலின் கனவு?

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் எப்போது என்ற சர்ச்சை இன்னும் நீடிக்கின்றது. நாட்டின் அதியுயர் அதிகாரப் பதவியில் - நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பொறுப்பில் - அடுத்துத் தாம் அமர்த்தப் போகின்றவரைத் தெரிவுசெய்வதற்கான உரிமை தங்களுக்கு இனி எப்போது கிடைக்கும் என்பதைக்கூட அறியமுடியாத - அறிந்து கொள்வதற்கு வாய்ப்பும் உரிமையும் இல்லாத - துரதிஷ்டசாலிகளாக இந்த நாட்டு மக்கள் உள்ளனர்.

அரசமைப்பு வழங்கிய அதிகாரப்படி இதில் தீர்மானம் எடுக்க வேண்டிய - முடிவை அறிவிக்க வேண்டிய - தேர்தல் ஆணையாளர் வாயை மூடிக்கொண்டு, அசாதாரண அமைதி பேணுகின்றார்.

அவரின் தீர்மானத்தால் பயனடையப் போகின்ற - அல்லது பாதிப்படையப் போகின்ற - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவோ, தனது தற்போதைய பதவிக்காலம் அடுத்த ஆண்டு இறுதியில் தான் முடியும், அப்போதுதான் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் என்று கணக்கு விடுகின்றார். ஆனால், அப்படிக் கூறவோ, அதில் முடிவெடுக்கவோ அவருக்கு அதிகாரம் இல்லை. அரசமைப்பு ரீதியாக அதிகாரம் கொண்ட தேர்தல் ஆணையாளரோ மக்களுக்கு உண்மை நிலையைத் தெளிவுபடுத்தாமல் காலம் வரும்போது என் வேலையை நான் செய்வேன் என்ற ரீதியில் - சட்டப்படி செயற்படுகின்றார் என்று நினைத்துக்கொண்டு - வாய்மூடி மௌனப் போக்கைக் கடைப்பிடிக்கிறார்.

நாட்டு மக்கள்தான் பாவம்.

என்றாலும் கடந்த கால நிகழ்வுகள், ஜனாதிபதித் தேர்தல்கள் நடந்த திகதிகள், ஜனாதிபதி சந்திரிகாவின் சத்தியப் பிரமாண நிகழ்வுகள், அவர் 2000 ஓகஸ்டில் தாமே நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த புதிய அரசமைப்புக்கான நகல் சட்டத்தில் தமது பதவிக்காலம் குறித்து அவரே தெரிவித்துள்ள அம்சங்கள் போன்றவற்றைப் பரிசீலித்த சட்ட அறிஞர்கள், இன்னும் நான்கு மாதங்களில் - அதாவது அடுத்த ஒக்ரோபர் 21ஆம் திகதிக்கும் நவம்பர் 21ஆம் திகதிக்கும் இடையில் - அடுத்த ஜனாதிபதி - அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டேயாகும் என்கின்றனர்.

அது சரி என்றால் அடுத்த இரண்டு மாதங்களில் அந்தத் தேர்தல் பற்றிய அறிவிப்பு வெளிவருவதற்குப் பெரும்பாலும் சாத்தியம் உண்டு.

அப்படி ஒரு தேர்தல் நடத்தப்பட்டால் இன்றைய நிலையில் அது தனக்குச் சாதகமாக வரும் என ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கருதுகிறார்.

இரண்டு பதவிக்காலத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பூர்த்தி செய்கிறார் என்பதால் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் அவர் போட்டியிட முடியாது. ஆகவே, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவோ அல்லது பண்டாரநாயக்க குடும்ப வாரிசான அனுரா பண்டார நாயக்கவோ அல்லது வேறு யாரோ ஜனாதிபதித் தேர்தலில் நிற்கலாம். அந்த வேட்பாளரைத் தெரிவு செய்வதற்கே ஆட்சிக்குள் குடுமிப்பிடிச் சண்டை, இழுபறி, சர்ச்சை, உள்வீட்டுக் குழப்பம் எல்லாம் ஏற்பட அதிக வாய்ப்புண்டு.

பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவில் அந்தச் சிக்கல் ஏதுமில்லை. கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவே அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் என்பதை நேர காலத்துடனேயே அறிவித்து, அதில் ஒன்றுபட்டு, கட்சி வேலை செய்யத் தொடங்கி விட்டது.`

அதேசமயம் ஆளும் கட்சிக்கு எதிராக இப்போது சீறிக்கொண்டிருக்கும் ஜே.வி.பியும் ஹெல உறுமயவும்கூட, ஜனாதிபதித் தேர்தலை தங்கள் பலத்தைக் காட்டும் பரீட்சைக்களமாகப் பிரகடனப்படுத்தி ஸ்ரீல.சு.கட்சிக்கெதிராக தமது வேட்பாளர்களை நிறுத்தக்கூடும் எனக் கருதப்படுகின்றது.

இப்படி ஜே.வி.பி., ஹெல உறுமய, ஸ்ரீ.ல. சு.கட்சி எனத் தனது எதிர்த்தரப்பு மூன்று துண்டுகளாகப் பிரிந்து நிற்கத் தாம் சுலபமாக வென்று ஜனாதிபதியாகி விடலாம் என ஐ.தே. கட்சித் தலைவர் கணக்குப் போடுகிறார்; கனவு காண்கிறார். ஆனால், அது பகற் கனவாய்ப் போய்விட அதிகவாய்ப்புண்டு என்பதை அவர் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இன்றைய நிலையில் அடுத்த மூன்று, நான்கு மாதங்களுக்குள் தேர்தல் நடந்தால் தமக்கு தமிழ், முஸ்லிம் சிறுபான்மையினரின் வாக்குகள் திரண்டு கிடைக்கும் என ரணில் கருதுகிறார்.

ஏற்கனவே ஜனாதிபதி சந்திரிகாவின் செயற்பாடுகளால் எரிச்சலும், விசனமும் அடைந்துள்ள தமிழர்கள், புலிகளோடு அமைதி முயற்சிகளைத் தாம் ஆரம்பித்து, அவர்களைத் தமிழர்களின் ஏக பிரதிநிதியாக ஏற்று, அவர்களோடு தாம் யுத்தநிறுத்த ஒப்பந்தம் செய்ததால் ஒன்று சேர்ந்து தம்மை ஆதரிப்பார்கள் என அவர் கணிக்கிறார். ஜனாதிபதி சந்திரிகாவின் பொதுக்கட்டமைப்பு ஏற்பாட்டில் தாங்கள் ஒதுக்கப்பட்டுவிட்டனர் எனக் கொதிக்கும் முஸ்லிம் மக்களும் தம்மையே முழுதாக ஆதரிப்பார்கள் என எதிர்பார்க்கிறார் ரணில்.

ஆக சிங்கள பெரும்பான்மையினரிடையேயுள்ள தனது வழமையான வாக்குகளோடு, சிறுபான்மையினரின் வாக்குகளையும் சேர்த்துத் தாம் சுலபமாக வென்றுவிடலாம் என்பதுதான் அவர் கணக்கு. ஆனால், அது தப்புக் கணக்காகத்தான் தோன்றுகிறது.

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் தமிழர்களையும், முஸ்லிம்களையும் பிரித்து வைக்கும் விதத்தில் அவரது கட்சியினர் வெளியிட்டு வரும் கருத்துகள் அவருக்கே 'பூமராங்' ஆகத் திருப்பி வந்து தாக்கும் சூழ்நிலையே தென்படுகிறது. முஸ்லிம் தலைவர்களைத் தன் பக்கம் திருப்புகிறார் என நினைத்துக்கொண்டு அவர் எடுக்கும் நடவடிக்கை தமிழர்களை அவரிடமிருந்து நிரந்தரமாகத் தள்ளி வைக்கப்போகிறது.

அதுமட்டுமல்ல ஜே.வி.பியும், ஹெல உறுமயவும் ஒவ்வொரு வேட்பாளர்களை நிறுத்தினால் ரணிலுக்கு எதிரணியில் வாக்குகள் பிரியலாம். ஆனால், அந்த இரண்டு கட்சிகளுக்கும் கணிசமான வாக்குகள் விழும். அத்தோடு சு.க.வேட்பாளருக்கும் விழும் வாக்குகளையும் சேர்த்தால் அந்த மூன்று பேருக்கும் கிடைத்த வாக்குகளை விட ரணிலுக்குக் கிடைக்கும் வாக்குகள் கூடப் போவதில்லை. எனவே, ஐம்பது வீதத்துக்கும் கூடுதலான வாக்குகளைப் பெற்று முதல் சுற்றிலேயே வெல்லும் எதிர்பார்ப்பு ரணிலுக்குச் சாத்தியப்படாமல் போகும்.

அப்படி நிகழ்ந்து இரண்டாவது சுற்றுக்குப் போகும்போது ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகளுக்குத் தமது முதல் வாக்கை அளித்தவர்கள் நிச்சயமாக தமது அடுத்த வரிசைத் தெரிவாக ரணிலைக் குறிப்பிட்டிருக்கப் போவதில்லை. ரணில் மற்றும் சு.க வேட்பாளர்களில், சு.கவின் வேட்பாளரையே அவர்கள் அடுத்த வரிசைத் தெரிவுக்கு தேர்ந்திருப்பார்கள் என்பது தென்னிலங்கை அரசியலை அறிந்தவர்களுக்கு நன்கு புரியும்.

அத்தகைய நிலைமை ஏற்பட்டால், முதல் சுற்றில் தனித்து அதிக வாக்குகளை ரணில் பெற்றாலும், அடுத்த சுற்றில் வெற்றியை சு.க வேட்பாளரிடம் அவர் பறிகொடுக்க - கோட்டைவிட - நேரலாம்.

சிறுபான்மைத் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தும் விதத்தில் அரசியல் நடத்த முயலும் ஐ.தே.கட்சி இது குறித்து இப்போதே சிந்திப்பது நல்லது.

# ஆறு மாதங்கடந்தும் ஏழாம் வகுப்புப் பாடநூல்கள் இல்லை
# கல்வியில் சமவாய்ப்பு மறுக்கப்படுவதாகக் குற்றச்சாட்டு

காரைதீவு,ஜூன்28

இவ்வாண்டின் ஆறுமாதங்கள் கடந்தும் ஏழாம் வகுப்பிற்குரிய இவ்வாண்டுக்கான பாடநூல்கள் இன்னும் வழங்கப்படாதது கண்டனத்துக்குரியது.

- இவ்வாறு கூறும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி வெளியீட்டுப்பிரிவு ஆணையாளருக்கு அவசர கடிதமொன்றையும் அனுப்பிவைத்துள்ளது.

ஏழாம் வகுப்பிற்குப் புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள புவியியல், வரலாறு, குடியுரிமைக் கல்வி போன்ற பாடங்களுக்கான நூல்களில் பாரிய எழுத்துப் பிழைகள், இலக்கணப் பிழைகள், கருத்துப் பிழைகள் உள்ளன. இவற்றை திருமலையில் நடைபெற்ற கல்விக் கூட்டத்தில் கல்விக் கழகமும் நாமும் இணைந்து சகல பிழைகளையும் சுட்டிக்காட்டி அதற்கான திருத்தங்களையும் கூறி எழுத்துவடிவில் தயாரித்து வழங்கியிருந்தோம். அதனைச் சீர்செய்து புதிய புத்தகம் வெளியிடுவதாக கல்வி வெளியீட்டுப் பிரிவு உறுதியளித்திருந்தும் இன்னும் திருத்திய நூலோ, திருத்தாத நூலோ எதுவுமே வரவில்லை. இது எமது மாணவர்களுக்கு காட்டப்படும் பாரபட்சம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-84)

# ஐஸ்கிறீம் வாகனங்களில் இரவில் பாடல் ஒலிபரப்புவதற்குத் தடை!

யாழ்ப்பாணம்,ஜூன்28

யாழ்.மாவட்டத்தில் ஐஸ்கிறீம் விற்பனை செய்யும் வாகனங்களில் இரவு நேரத்தில் ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்வதை பொலீஸார் தடைசெய்துள்ளனர்.

இரவு நேரங்களில் இந்த வாகனங்களில் ஒலிபெருக்கி மூலம் மெல்லிசைப் பாடல்கள் ஒலிபரப்பப்படுவதால் மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்படுகின்றது எனப் பல்வேறு முறைப்பாடுகள் பொதுமக்களிடம் இருந்து பொலீஸாருக்குக் கிடைத்துள்ளன.

இந்த முறைப்பாடுகளை அடுத்து பாடல்கள் ஒலிபரப்புவதைத் தடைசெய்யப் பொலீஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றும் -

பொலீஸார் இரவு ரோந்து மேற்கொண்டு இதைத் தடுக்க ஏற்பாடு செய்துள்ளனர் என்றும் -

பொலீஸ் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (ஐ-3-ரி)



ஆழிப்பேரலை அனர்த்தம் நிகழ்ந்து ஆறு மாதங்கள் பூர்த்தியடைந்ததையொட்டி நேற்றுமுன்தினம் வடமராட்சியில் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

மணற்காட்டில் நடைபெற்ற நிகழ்விலே வண.பேடின் அடிகளார் இறந்தவர்களின் சமாதிகள் மீது பன்னீர் தெளித்து ஆசி வழங்குவதையும் வடமராட்சி அரசியல்துறை சார்பில் கலந்துகொண்ட உடுப்பிட்டி பிரதேச பொறுப்பாளர் ரமேஷ் மற்றும் பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: கரவெட்டிச் செய்தியாளர்)

# தமிழர் கல்வித் தரம் வீழ்ச்சியடைந்து வருகிறது?

காரைதீவு,ஜூன்28

இலங்கையில் தமிழர் கல்வித்தரம் வீழ்ச்சியடைந்து வருவதாக ஆய்வுத் தரவுகள் தெரிவிக்கின்றன.

கொழும்புப் பல்கலைக்கழக கல்விப் பிரிவின் தேசிய கல்வி மதிப்பீட்டு ஆராயச்சி நிலையம் (NEREC) மேற்கொண்ட ஆய்வின் முடிவுகள் இத்தகவலைச் சுட்டி நிற்கின்றன.

உலக வங்கி அறிக்கையிலும் இது சுட்டிக்காட்டப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

தொடர்ந்து வந்த போர்ச்சூழல், இடம்பெயர்வு, கல்வியில் சமவாய்ப்பின்மை, பாரபட்சம், இடைவிலகல் போன்ற இன்னோரன்ன காரணங்கள் கூறப்படுகின்றன.

தமிழ் மொழிமூல நடைமுறையில் தமிழர்களின் வீதம் குறைவடைந்துசெல்வதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

கல்வியமைச்சில் பெருந்தோட்டப் பாடசாலைகள் பிரிவு, முஸ்லிம் பாடசாலைகள் பிரிவு என்று இருப்பது போன்று தமிழ்ப் பாடசாலைகளுக்கென்று ஒரு பிரிவு இதுவரை ஏற்படுத்தப்படாதிருப்பது தமிழ்க் கல்வி உலகில் அதிர்ச்சிக்குள்ளான விடயமே.

தமிழ்க் கல்விப் பிரிவு ஆரம்பிக்கப்பட வேண்டுமென தமிழர் ஆசிரியர் சங்கம் தொடர்ச்சியாக் கோரிவருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-84)

# ஆயுதங்களுடன் வான் ஓமந்தையில் சிக்கியது

## சாரதி உட்பட இருவர் கைது

வன்னியில் இருந்து வவுனியாவிற்கு வந்த வான் ஒன்றிலிருந்து எவ்.என்.சி.ரக ஆயுத தளபாடங்களை ஓமந்தையில் படையினர் கைப்பற்றியுள்ளனர். வானின் சாரதி உட்பட அதிலிருந்த இரண்டு முஸ்லிம்களும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை மாலை 4.30 மணியளவில் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் செல்வதற்காக இந்த வான் ஓமந்தை வந்தது என்று படையினர் தெரிவித்தனர். அதனைச் சோதனையிட்ட படையினர் அதற்குள்ளிருந்து ஆயுத தளபாடங்களைக் கைப்பற்றினர் என்று பொலீஸார் கூறினர்.

வானின் சாரதியான புத்தளத்தைச் சேர்ந்த மஹ்ரூவ் மற்றும் பயணிகளான பாணந்துறையைச் சேர்ந்த மொஹமட் இஸ்மாயில் ஆகியோரே கைது செய்யப்பட்டனர். இவர்கள் இருவரும் மேலதிக விசாரணைக்காக ஓமந்தைப் பொலஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ஐ-க)

# ஜனாதிபதி - கடற்படைத் தளபதி முறுகல்?

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் படைகளின் பிரதான தளகர்த்தாவும் கடற்படைத் தளபதியுமான தயா சந்தகிரிக்கும் இடையே முறுகல் நிலை தோன்றியுள்ளதாக சிறிலங்கா இராணுவ வட்டாரச் செய்திகள் தெரிவிக்கின்றன.

திருமலையின கிழக்குப் பிரதேச கடற படை தளபதியாக இருந்த சரத்வீர சேகரவை கொழும்புக்கு மாற்றினார் தயாசந்தகிரி. திருமலையில் மேற்கு கடற்படைத் தளபதியாக சரத்ரத்ன கீர்த்தியை நியமித்தார்.

ஜனாதிபதி சந்திரிகாவோ, கொழும்புக்கு மாற்றப்பட்ட சரத் வீரசேகரவுக்காக புதியதாக கடற்படைத்தலைமையக துணைத்தலைமை அதிகாரி பதவியை உருவாக்கி அவரை அதில் நியமித்தார்.

மேலும், சரத் ரத்ன கீர்த்தியை கிழக்குப் பிரதேசத்திலிருந்து மாற்றி விட்டு அந்த இடத்தில் வசந்தகரன்னகொடவை நியமித்தார். இவர் வடக்கு மத்திய கடற்படை தளபதி ஆவார்.

இந்த அதிரடி மாற்றங்களால் தயா சந்தகிரியின் உத்தரவுகளைச் செல்லு படியாகாத நிலைக்குள் தள்ளியுள்ளன. தயா சந்தகிரிக்கும் ஜனாதிபதிக்கும் இடையேயான முறுகல நிலைதான் இதற்குக் காரணம் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஐ-க)

## உதயவாக்கு

உண்மையை அறிவது ஞானம்;
உண்மையை நம்புவது பக்தி;
உண்மையாக நடப்பது மார்க்கம்.
- ஓர்ஞானி

## நாளை

ஆனி 15
புதன்கிழமை
29.06.2005
திதி : அட்டமி
பிற்பகல்: 04.48 வரை
நட்சத்திரம் : உத்தரட்டாதி
முற்பகல் 11.30 வரை
சுபநேரம் : 04.26 - 05.56
ராகுகாலம்: 11.56 - 01.26
(யாவும் பழைய நேரப்படி)



# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

எம்மிடம் வெற்றுக் கடதாசிப் பெட்டிகள் ஒரு தொகை விற்பனைக்குண்டு. (Caltex oil பெட்டிகள்) தொடர்பு: T.P.: 021 222 7398. (37031)

## வீடு விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கில் 2 பரப்பு 11குழி காணியிலமைந்த வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 011 4613157 (நியாயமான விலை கோரும் முதல் நபருக்கே கொடுக்கப்படும். (36890)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ஒரு கைப் பாவனையான CD 200 87 ஸ்ரீ XXXX தொடர் இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: க.நாதன், ஐயனார் கோயிலடி, சுன்னாகம். T.P.: 077 3173730. (37010)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து ஏற்றப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் நேற்று (27.06.2005) திங்கட்கிழமை முதல் விநியோகிக்கப்படுகிறது. எமது பருத்தித்துறை, நெல்லியடிக் கிளைகளிலும் சுட்டிபாம் - வட்டுக்கோட்டை, சந்நிதி பாம் - தொண்டைமானாறு, ஐங்கரன் களஞ்சியம், திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூரிலும் பெற்றுக் கொள்ளலாம். (36808)

35 நாளில் 2Kg மேல் வளர்ச்சியடையக் கூடிய நம்பர் - 1 பகிரா புறொயிலர் குஞ்சுகள் 02-07-2005 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். தொடர்பு: ராஜீவ் ஆனைக்கோட்டைச் சந்தி. தாரகை, முதலாம் கட்டை, பருத்தித்துறை. றஞ்சித், 517, ஸ்ரான்லி றோட். ராதா, மாவடி, வட்டுக்கோட்டை,. கௌரி ஸ்ரோர்ஸ், பிரதான வீதி, பண்டத்தரிப்பு. P.ரவி, சாவகச்சேரி. (37039)

## வீடு வாடகைக்கு

யாழ்.நகரப் பகுதியில் முதலாம் குறுக்குத் தெருவில் வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகில் வசதியான வீடு வாடகைக்குண்டு. யாழ்.நகரப் பகுதியில் தொழில்புரியும் அரச ஊழியர் ஒருவரின் குடும்பம் விரும்பத்தக்கது. விரும்பியவர்கள் 032 2267374 அல்லது 0777 609382 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு உடன் தொடர்புகொள்ளவும். (37037)

## தவறிவிட்டது

இல.167, அரசடி வீதி, நல்லூரைச் சேர்ந்த துரைராசா ருக்குமணி என்பவருடைய தேசிய அ.அட்டை (இல.447591898V), நிவாரண அட்டை, பொ.ச.மாதாந்த உதவிப்பண அட்டை (இல.5608) என்பன (20-06-2005) திங்கட்கிழமை திருநெல்வேலிக்கும் அரசடி வீதி, வைமன் வீதி, பற்றிக்ஸ் வீதிகளுக்கிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல.48/2, இராஜேந்திரா வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். (37042)

கொக்குவில், 42, பிரம்படி லேனைச் சேர்ந்த குமாரசூரியன் செந்தூர்க்குமரன் என்பவருடைய தேசிய அ.அ. (இல.851550151V), விசேட அ.அ. என்பன 26-06-2005 ஞாயிற்றுக்கிழமை தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் K.அருட்குமரன், 325, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் அல்லது மேலுள்ள முகவரியில் ஒப்படைத்துதவவும். (37043)

## விபத்துகளில் ஐவர் காயம்!

தென்மராட்சி,ஜூன்28

மோட்டார் சைக்கிள் விபத்துகளில் சிக்கி ஐந்து பேர் காயமடைந்தனர்.

தென்மராட்சியில் வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற விபத்துகளில் சிக்கியே இவர்கள் காயமடைந்துள்ளனர்.

வரணி வடக்கைச் சேர்ந்த கதிரன் உதயச்சந்திரன் (வயது-36), நுணாவில மேற்கைச் சேர்ந்த பொன்னம்பலம் நவரத்தினராசா (வயது - 58), மட்டுவில வடக்கைச் சேர்ந்த இராசையா சிறி (வயது-29), சாவகச்சேரி சிவன் கோயிலடியைச் சேர்ந்த கிருஷ்ணன் உதயகுமார் (வயது - 37), மட்டுவில் வடக்கைச் சேர்ந்த செல்லையா செல்வகுமார் (வயது-27) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். (ஜ-117)


# புதிய பிரிவுகள் ஆரம்பம்
# AAT (SRILANKA)
## STAGE- I

மொழி மூலம்: ஆங்கிலம்/ தமிழ்
பரீட்சை: ஜனவரி 2006
கல்வித் தகைமை: G.C.E O/L 5 பாடங்கள் அல்லது A/L 2 பாடங்கள்.
வாரஇறுதி/ பகல்நேர வகுப்புகள்.
ஆரம்பம்: 17.07.2005 காலை 9.30மணி

## CIMA
FOUNDATION LEVEL EXAM - DEC. - 2005
MINIMUM REQUIREMENT O/L 3 (c) PASSES
MEDIUM ENGLISH
ஆரம்பம்: 17.07.2005 9.30 a.m.

குறிப்பு: விசேட புலமைப்பரிசில் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட உள்ளன.
உடன் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

மேலதிக விவரங்களுக்கு:
DIRECTOR,
JAFFNA COLLEGE
UNDER GRDUAE DEPT.,
464, HOSPITAL ROAD,
JAFFNA.
(சி-43668) (30-11-13-26)



# உடனடி வேலை வாய்ப்பு
## ஆய்வுகூட உதவியாளர்

எமது கணனி நிறுவனத்துக்கு கணனித் துறையில் திறமையும் ஆர்வமும் உள்ள ஆய்வுகூட உதவியாளர் தேவை.

அச்சுவேலி பகுதியிலிருந்து 3KM சுற்றுவட்டத்திற்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

ஆர்வமுடையோர் 29.06.2005 புதன்கிழமை காலை 9.00 மணிக்கு சுய விவர ஆவணங்களுடன் நேர்முகப் பரீட்சைக்கு சமுகம் தரவும்.

EST (37033) (30-11-24-26)
Elite School of Technology
சபா கடை மேல்மாடி, அச்சுவேலி.



# SPECIAL ENGLISH

An Integrated Course for
- O/L and A/L students
- School Leavers
- Students of Higher Studies
- The Employed
- Teachers

Begin - Buildup - Enrich all Language skills

ஆரம்பம் : 02.07.2005 பி.ப 2.30
சனி, ஞாயிறு பிற்பகல் வகுப்புகள்

ஆசிரியர் : த.ந.பஞ்சாட்சரம்

மேலதிக விவரங்களுக்கு :
நிர்வாகி,
NEW SCIENCE HALL
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
(37041)(32-11-13-26)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 16 - 03 - 1973



இறப்பு 28 - 06 - 2004

## செல்வி நேசமலர் ஞானசப்பிள்ளை தங்கராணி

(முன்பள்ளி ஆசிரியை)

திதி: 28-06-2005

பாசமலர் போன்ற நேசமலரே - நீர்
விண்ணுலகம் சென்று ஆண்டொன்று ஆனதுவோ?
உம்மிடத்தை நிரப்ப எம்மிடத்தில் இங்கு யாருமில்லை
உம் வரவை எதிர்பார்த்து ஏமாந்து போனோம்
இன்றும் எம் வீட்டுக்கதவு திறந்திருக்கிறது - உங்களுக்காக.
*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

இன்று (28-06-2005) செவ்வாய்க்கிழமை முற்பகல் வீட்டில் நடைபெறும் பிரார்த்தனையிலும் மதிய உணவிலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

ஏழாலை தெற்கு,
மயிலங்காடு. (37048)(26-11-19) - **ஞானசப்பிள்ளை குடும்பத்தினர்.**


## கடை விற்பனைக்கு

இல.226, கஸ்தூரியார் வீதியில் (பாரத் ஸ்ருடியோ அருகில்) மேல்மாடியுடனான கடை விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்பு: திரு.திருமதி தியாகராசா,
39. கல்லூரி வீதி. நீராவியடி. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 - 2225048. (37040)


# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 23 - 03 - 1944



மறைவு 28 - 06 - 1999

## செல்வி பரமேஸ்வரி செல்லத்துரை

திதி: பூரணை 21-06-2005

அன்பின் திருவுருவாய் அணையா ஒளி விளக்காய்
விஞ்சும் பெருநிலவாய் வழிகாட்டிய - தெய்வமே!
ஆண்டுகள் பல சென்றாலும் ஆறாது எம் துயர்
நீண்டிடும் எம் வாழ்வில் நிறைவினைத் தந்திடும்.
*உங்கள் ஆத்மா சாந்திபெறத் தென்கோவை வீரபத்திரரைப் பிரார்த்திக்கின்றோம்.*

"தாயகம்",
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (37032)(26-11-13)

*உங்கள் நினைவுடன்:*
**- குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## திருமதி பொன்னம்பலவாணர் சரஸ்வதி

காரைநகர், களபூமி, திக்கரையைப் பிறப்பிடமாகவும், மட்டக்குளியை வசிப்பிடமாகவும் வடக்கம்பரை, பண்ணாகத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்பலவாணர் சரஸ்வதி அவர்கள் 26.06.2005 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னம்பலவாணர் (ஓய்வுபெற்ற தபால் ஊழியர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சோமசுந்தரம் - சுந்தரம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லையா - சிவகாமிப்பிள்ளை தம்பதியினின் மருமகளும் லோகதாசன் (லண்டன்), லோகராணி (லண்டன), லோகரஞ்சி (பண்ணாகம்), நந்திதேவி (கொழும்பு), வனஜா (கனடா), வதனா (கொழும்பு), ஸ்ரீஸ்கந்தவேல் (நியூஸிலாந்து) ஆகியோரின் அன்புத தாயாரும் ஜெயமாலினி, தர்மராஜா, ரவிச்சந்திரன், ராஜேந்திரன், பாலசுப்பிரமணியம், பரமேஸ்வரன் ஆகியோரின் மாமியாரும் அரவிந், கீர்ததிகா, கீர்த்தனா, டயானா, துலக்ஸனா, விஸ்வரூபன் காலஞ்சென்ற துஷியந்தன் (கண்ணன்) மற்றும் துஷியந்தி, மயூரன் ஆகியோரின் பேர்த்தியும் தனலக்சுமி, சிவபாக்கியம் ஆகியோரின் சகோதரியும் நாகம்மாள், பரமேஸ்வரி அம்மாள், கந்தசாமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் காரைநகர் தில்லை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விசுவத்தனை வீதி,*
*பண்ணாகம்.* (37035)(32-11-13-26)

தகவல்:
பொன்னம்பலவாணர் (கணவர்).

# மரண அறிவித்தல்

## தங்கராசா சிறிஸ்கந்தராசா



வடமராட்சி கிழக்கு, அம்பன், குடத்தனையை வசிப்பிடமாகக் கொண்ட தங்கராசா சிறிஸ்கந்தராசா 14-06-2005 செவ்வாய்க்கிழமை சுவிஸில் அகால மரணமானார்.

அன்னார் தங்கராசா - இராசமணி தம்பதியினரின் அன்பு மகனும் தயாநிதி, கலாநிதி (ஆசிரியை, குடத்தனை, தென்னிந்தியத் திருச்சபை), சிறிஸ்கந்தகுமார் (லண்டன்), ஜெயாநிதி (ஆசிரியை, விநாயகர் முன்பள்ளி, அம்பன்), சிறிஸ்கந்தவேல், சிறிஸ்கந்தா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சிவநேசன் (தபாலகம், பருத்தித்துறை) அன்பு மைத்துனரும் பவதாரணி (யா/அம்பன் அ.மி.த.க. பாடசாலை), நிதுஜன், றோஜி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (27-06-2005) திங்கட்கிழமை சுவிஸில் நடைபெற்றன.*

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்பன்,
குடத்தனை,
வடமராட்சி கிழக்கு. (சி-43690)(26-11-13)

தகவல்:
**மு.நகுலராசா** (மாமா),
உரிமையாளர்: நகுலேஸ்வரி அரைக்கும் ஆலை, அம்பன்.
நகுலேஸ்வரி தொலைத்தொடர்பகம், அம்பன்.
ராஜன் ஹாட்வெயர், பருத்தித்துறை.

# கரும்புலிகள் தினத்தை அனுஷ்டிக்க வன்னி எங்கும் விரிவான ஏற்பாடு

கிளிநொச்சி,ஜுன்28

அடுத்தமாதம் 5ஆம் திகதி வருகின்ற கரும புலிகள் தினத்தை மிகுந்த உணர்வெழுச்சியு டன் அனுஷ்டிப்பதற்கு வன்னிப்பெருநிலப் பரப் பெங்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

மாவட்ட, கோட்ட, பிரதேச ரீதியாக கரும் புலிகள் தினத்தை முன்னிட்டுப் பல்வேறு நிகழ்வு களுக்குத் திட்டமிடப்பட்டுள்ளன. கரும்புலி கள்தின ஏற்பாட்டுக்கென மாவட்டரீதியாக விசேட குழுக்கள் அமைக்கப்படுவதுடன், அது தொடர் பான கலந்துரையாடல்களும் இடம் பெற்று வருகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தின் கரும் புலிகள் தின ஏற்பாடுகள் தொடர்பாக கடந்த 21ஆம் திகதி மாவட்ட அரசியல்துறை அலுவல கத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

கரும்புலிகளின் திருவுருவப்படங்கள் தாங் கிய ஊர்திகள் கிளிநொச்சி மாவட்டம் எங் கும் உலாவர இருப்பதாகவும், பிரதேசரீதியாக கரும்புலிகளின் திருவுருவப் படங்கள் வைத்து அஞ்சலி நிகழ்வுகள் நடைபெறவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டம் எங்கும் கரும்புலி களின் திருவுருவப்படங்கள் தாங்கிய ஊர்தி களை எடுத்துச்சென்று செயற்படுத்த கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவாளர்கள் முன்வந்துள்ளனர் என றும் தெரிவிக்கப்படுகிறது.

கரும்புலிகள்தின இறுதிநாள் நிகழ்வுகள் பளை, பூநகரி, முழங்காவில் மற்றும் கிளி நொச்சி நகரப்பகுதியில் நடத்துவதற்கு ஏற் பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் கரும்புலி கள் நினைவுதினத்தைச் சிறப்பாக அனுஷ் டிப்பதற்கான முன்னேற்பாடுகளைப் புதுக்குடி யிருப்புப் பிரதேச அரசியல்துறையினர் மேற் கொண்டுள்ளனர்.

இது தொடர்பான கலந்துரையாடல்கள் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் பரவலாக இடம் பெற்றுவருகின்றன.

புதுக்குடியிருப்புப் பிரதேச கோட்ட தேசிய எழுச்சிப்பேரவைத் தெரிவும் கரும்புலிகள் நாள் தொடர்பான கலந்துரையாடலும் கடந்த வியா ழக்கிழமை முல்லை.மாவட்ட அரசியல்துறை அலுவலகத்தில் இடம்பெற்றன.

புதுக்குடியிருப்புப் பிரதேச அரசியல்துறைப பொறுப்பாளர் இ.பிறையாளன் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் புதுக்குடி யிருப்புப் பிரதேச எழுச்சிப் பேரவைச் செய லாளராக தா.சண்முகமும் உபசெயலாளராக கே. ரி.சிவராசாவும் பொருளாளராக க.செபமாலை முத்துவும் தெரிவுசெய்யப்பட்டனர். இவர் களுடன் 8பேர் நிர்வாகசபை உறுப்பினர்களா கத் தெரிவுசெய்யப்பட்டனர்.

முல்லை.மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழ கப் பொறுப்பாளர் மூர்த்தி, தமிழீழ பொருண் மிய மேம்பாட்டு நிறுவனத் துணைப்பொறுப்பா ளர், முல்லை.மாவட்ட அரசியல்துறைப் பொறுப் பாளர் செ.முகுந்தன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

கரும்புலிகள் நாளை அனுஷ்டிப்பது தொடர் பாக இக்கலந்துரையாடலில் ஆராயப்பட்டது. பாடசாலை அதிபர்கள், கிராமசேவையாளர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்ட னர். (த-352-410-353)

## மாவீரர்களின் பெற்றோர் கௌரவிக்கப்பட்டனர்

பரந்தன்,ஜுன்28

பெரியகுளம் பகுதியிலுள்ள விசுவாசம் சன சமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் வர முரசு நிகழ்வும் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வும் கடந்த 22ஆம் திகதி மாலை 5.30 மணிக்குப் பெரியகுளம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் அருளானந்தம் தலைமையில நடைபெற்றது.

பொதுச்சுடரினை வட்டக்கச்சி பிரதேச அர சியல்துறைப் பொறுப்பாளர் சு.சுடர் ஏற்றிவைத் தார். தமிழீழத் தேசியக்கொடியை அரசியல் துறை நடுவப் பணியகத்தைச் சேர்ந்த அன் ரனி ஏற்றிவைத்தனர். முதல் மாவீரர் லெப்டி னன்ட் சங்கரின் திருவுருவப் படத்திற்கு வட் டக்கச்சி பிரதேச மகளிர் அரசியல்துறைப் பொறுப் பாளர் செ.ஆரணி ஈகச்சுடரினை ஏற்றிவைத் தார்.

முதல் பெண் மாவீரர் லெப்.மாலதியின் திருவுருவப் படத்திற்குப் பெரியகுளம் கிராம அலுவலர் திருமதி சிவராசா ஈகச்சுடர் ஏற்றி வைத்தார்.

கரும்புலி மாவீரர்களின் பொதுப்படத்திற்கு பிரான்ஸ் நாட்டில் வசித்துவரும் சி.அருண் அம்மா ஈகச்சுடரினை ஏற்றிவைத்தார்.

தியாகதீபம் திலீபன் அவர்களின் திருவுருப படத்திற்கான ஈகச்சுடரினைப் புலிகளின் குரல் நிறுவனத் துணைப்பொறுப்பாளர் செயல் வீரன் ஏற்றினார் . இதனைத் தொடர்ந்து மாவீரர் பெற் றோர்கள் சுடர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து கருத்துரைகளும் கலைநிகழ்வு களும் இடம்பெற்றன.

(த-352)

## வாழ்வியல் பயிற்சி முடித்தோருக்கு சான்றிதழ் வழங்கிக் கௌரவிப்பு

'வாழ்வை ஒளிர்விக்கும் நிலையத்தில்' வாழ்வியல் பயிற்சியை முடித்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கண்காட்சியும் குமுழமுனை புனித அந்தோனியார் ஆலய முன்றிலில அண்மையில் நடைபெற்றன.

அருட்திரு ச.பாஸ்கரன் அடிகளார் தலை மையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு அங்கு பயிற்சி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ் களை வழங்கிக் கௌரவித்தார்.

பெண்கள் சமூக விழிப்புணர்வு பெறவும் தொழில்வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளவும் என ஆரம்பிக்கப்பட்ட வாழ்வியல் பயிற்சியில் 24 பேர் பயிற்சிபெற்று வெளியேறியுள்ளனர்.

இந்த நிலையத்தில் தையல், பன்னவேலை, சமையல், கேக்ஐசிங், பூசெய்தல், சிகை அலங் காரம், வர்ணந்தீட்டுதல், ஆங்கில வகுப்பு போன்ற பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

(த-415-203)



வாழ்வை ஒளிர்விக்கும் நிலையத்தில் பயிற்சிபெற்ற மாணவர்களையும் இவர்களுக்கான சான்றிதழ் வீழங்கும் நிகழ்வில் கலந்துகொண்ட யாழ்.ஆயர் அருட்திரு. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை மற்றும் பிரமுகர்களையும் படத்தில் காணலாம். *(படம்: வெள்ளாங்குளம் செய்தியாளர்)*

## விசுவமடுப் பிரதேசத்தில் கால்நடைகளுக்குத் தடுப்பூசி

பரந்தன்,ஜுன்28

கால்நடைகளுக்கு ஏற்படும் தொண்டை அடைப பான் நோய்க்கான தடுப்பூசி மருந்து ஏற்றும் நடவடிக்கைகள் விசுவமடுப் பிரதேசத்தில் முதற கட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்ட கால்நடை சுகாதார வைத்தியர் எஸ்.கஜரஞ்சன் தலைமையில் கால நடை சுகாதாரத் திணைக்களப் போதனாசிரியர் களான கே.அன்ரன், எஸ்.யோன்சன் ஆகியோர் இப்பகுதிக் கமக்கார அமைப்புகளுடன் இணைந்து இநத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறு வனத்தின் ஒழுங்குபடுத்தலில் விசுவமடு கிழக்கு, விசுவமடு மேற்கு ஆகிய கிராமங்களில் முதற் கட்டமாக - குறிப்பாக மாடுகளுக்கான தடுப்பூசி மருந்து ஏற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

மாடுகளை வளர்ப்பவர்கள் பருவ காலத் தில் முதல் மழை ஆரம்பிப்பதற்கு முன்னதாக மாடுகளுக்குத் தொண்டை அடைப்பான் நோய்க கான தடுப்பூசி மருந்தை ஏற்றவேண்டும் என வும் -

தடுப்பூசி மருந்து ஏற்றப்படாத மாடுகள் இந்த நோயால் பாதிக்கக்கூடும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

எனவே, தவறாது மாடுகளுக்குத் தடுப்பூசி மருந்துகளை ஏற்றவேண்டும் என்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் கேட் டுள்ளனர்.

(த-352-203)




## உருத்திரபுரம் வீதி திருத்தப்படவில்லை

உருத்திரபுரம் பற்றிமா ஆலய வீதி நீண்ட காலமாகத் திருத்தப்படாது உள்ளது.

குண்டுங்குழியுமாகக் காணப்படும் இவ்வீதி யால் பயணிப்போர் பல்வேறு சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

மழை காலங்களில் வீதிகளில் தேங்கி நிற்கும் வெள்ளத்தினால் பாடசாலை மாணவர் கள், வேலைக்குச் செல்வோர் பல்வேறு அசௌ கரியங்களைச் சந்தித்துவருகின்றனர்.

அத்துடன், வீதி விபத்துகளும் அடிக்கடி ஏற்படுகின்றன. இந்த வீதித் திருத்தம் குறித்து சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்பினருக்கும் அறி வித்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என இப்பகுதி மக்கள் அதி ருப்தி வெளியிட்டுள்ளனர்.

மழைகாலம் ஆரம்பிக்க முன்னர் இவ்வீதி யின் திருத்தம் குறித்து உரியவர்கள் நட வடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-352-204)

## விதை பொருள்களைக் களஞ்சியப்படுத்த பரந்தன் பண்ணையில் வசதிகள் இல்லை

பரந்தன்,ஜுன்28

கிளிநொச்சி மாவட்டத்தில் உற்பத்திக்கான விதைபொருள்களைப் பாதுகாத்து வைக்கக் கூடிய களஞ்சிய வசதிகள் இல்லாமையால் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள விதை பொருள் தட்டுப்பட்டை நீக்குவதற்காக பரந் தன் அரச பண்ணையில் விதை அத்தாட்சிப் படுத்தும் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப் பட்டுள்ளார்.

எனினும், உற்பத்திக்கான விதைபொருள் களை இங்குள்ள அலுவலகத்தில் பாதுகாத்து வைக்கக் கூடிய களஞ்சிய வசதிகள் எவை யும் இல்லை.

இதன் காரணமாக வவுனியாவில் இயங்கி வரும் உதவி விவசாயப் பணிப்பாளர் நடுகைப் பொருள்கள் அலுவலகத்திலேயே விதை பொருள்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள் ளன.

தேவையான நேரத்தில் அங்கிருந்து எடுத்து வரப்பட்டே விவசாயிகளுக்கு அவை வழங் கப்பட்டு வருகின்றன. இதனால், விவசாயிகள் பெரும்சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்தநிலையில் கிளிநொச்சி மாவட்டத்திற் கான விதை சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை பரந்தன் அரச பண்ணையில் விரைவில் அமைக்க விருப்பதாக உதவி விவசாயப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தேவையான விதை பொருள்கள் விவரத்தை தொடர்புடைய திணைக்கள அதிகாரிகள் வவுனியாவில் இயங் கும் உதவி விவசாயப் பணிப்பாளர் விதை பொருள்கள் அலுவலகத்திற்குத் தெரிவிக்கவேண டும் என்றும் அப்போதுதான் தேவைப்படும் விதை பொருள்களை விவசாயத் திணைக்களத தில் இருந்து பெற்றுக்கொள்ளமுடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் முன்பு இயங்கி வந்த விவசாயத் திணைக்கள விதைகள் நடு கைப்பொருள்களுக்கான உதவி விவசாயப் பணிப்பாளருக்கான அலுவலகம் தற்போது வவு னியாவில் இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக் கது.

(த-352-203)

## மாங்குளம், கரிப்பட்டமுறிப்பு கிராமங்களில் அபிவிருத்தி

ஒட்டுசுட்டான்,ஜுன்28

மாங்குளம் - கரிப்பட்டமுறிப்பு ஆகிய கிரா மங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன என்று மாங்குளம் அபிவிருத்தித் திணைக்கள அலுவ லர் தெரிவித்தார்.

இதில் கரிப்பட்டமுறிப்புக் கிராமத்தில் 35 வீடுகள் மீளவேய்தல், கிணறு திருத்தம், மல சலகூடம் அமைத்தல்போன்ற வேலைகள் செய யப்படவுள்ளன.

அத்துடன், அங்கு மாடுவளர்ப்பிற்கு 7 குடும பங்களுக்கு உதவிகள் வழங்கப்படவுள் ளன. இரு குடும்பங்களுக்கு தையல் இயந்திர உதவி களும், 4 குடும்பங்களுக்கு ஆடு வளர்ப்புத் திட்ட உதவியும் 6 குடும்பங்களுக்கு சிறுவியா பாரத்திற்கான ஊக்குவிப்புத் தொகையும் வழங் கப்படவிருக்கின்றன.

சிறார்களுக்கான முன்பள்ளி ஒன்றும் அங்கு அமைக்கப்படும். 30 குடும்பங்களுக்கு நெற் செய்கைத் திட்டத்திற்கும் 5 குடும்பங்களுக்கு சிறுதானியச் செய்கைக்கும் உதவித் திட்ட மும் வழங்கப்படவுள்ளன.

மாங்குளம் கிராமத்தில் 50 குடும்பங்களுக்கு வீடுகள் மீளவேய்வதற்கான உதவி வழங்கப் படும். அங்கு புதிய கிணறு ஒன்றும் அமைக் கப்படும்.

18 குடும்பங்களுக்கு மாடுவளர்ப்புத் திட் டத்துக்கும் 2 குடும்பங்களுக்கு தையல் இயந் திரங்களுக்கும், 6 குடும்பங்களுக்கு சிறுவியா பாரத்திற்கும், 4 குடும்பங்களுக்கு ஆடுவளர்ப் பிற்கும் 50 குடும்பங்களுக்கு நெற்செய்கைத் திட்டத்திற்கும் 12 குடும்பங்களுக்கு சிறுதானி யச் செய்கைக்கும் உதவிகள் வழங்கப்படவுள் ளன. பொதுநோக்கு மண்டபம் ஒன்றும் அங்கு அமையவிருக்கின்றது.

இந்த அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் அடுத்தவாரம் ஆரம்பிக்கப்படும் என்று தெரி விக்கப்பட்டது.

(த-341)

## அம்பலவன் பொக்கணையில் சுகாதார நிலையம் திறப்பு

புதுக்குடியிருப்பு,ஜுன்28

அம்பலவன் பொக்கணைப் பகுதியில் புதிதாக நிறுவப்பட்ட ஆரம்ப சுகாதார நிலை யம் கடந்த புதன்கிழமை சம்பிரதாய பூர்வமா கத் திறந்துவைக்கப்பட்டது.

அம்பலவன் பொக்கணை பாடசாலை அதி பர் ச.தெட்சணாமூர்த்தி தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை அம்பலவன் பொக்கணை பிரதேச கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் வேங்கைத்தமிழன் ஏற்றிவைத்தார். ஈகச்சுட ரினை தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பா ளர் விக்கினேஸ்வரன் ஏற்றினார்.

ஆரம்ப சுகாதார நிலையப் பெயர்ப்பலகை யினை முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப் பாளர் செ.முகுந்தன் திரைநீக்கம் செய்துவைத் தார். அடுத்து கட்டடத்தொகுதியை முல்லை. மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜெயகுல ராசாவும் அய்வுகூடத்தை தாய்சேய் நல மருத் துவர் சுதர்சனும் விடுதிக் கட்டடத்தினை 'யுனி செவ்' திட்ட இணைப்பாளர் வசந்தும் திறந்து வைத்தனர்.

செ.முகுந்தன், வேங்கைத்தமிழன், வைத் திய கலாநிதி ஜெயகுலராசா உட்படப் பலர் கருத்துரைகளை வழங்கினர்.

நிகழ்வின் இறுதியில் சுகாதார சேவைகள் உத்தியோகத்தர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

(த-410-353)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து






சிவச்செல்வன் –துஷிதா
தம்பதியினரின்
செல்வப் புதல்வி
**அபிநஜா**
தனது முதலாவது
பிறந்த தினத்தை
இன்று (28-06-2005)
செவ்வாய்க்கிழமை
பிற்பகல் 4 மணிக்கு
தனது இல்லத்தில்
கொண்டாடுகிறாா்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்தப்பாமாா், அத்தைமாா், மாமாமாா், அன்ராமாா், அன்புத்தம்பி, ஆசைப்பாட்டி, குஞ்சப்பப்பா மற்றும் உற்றாா், உறவினா் அனைவரும் பல்கலையும் கற்று இறைவனருள் பெற்றுச் சீருஞ்சிறப்புமாய் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறாா்கள்.

**கரன் சித்தா,**
**கஜன் மாமா.**

கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (37023)(26-11-34)

## கிரனேட் வீச்சில் ஒருவர் காயம்!

திருகோணமலை, அநுராதபுரம் சந்தியில் சனிக்கிழமை இடம் பெற்ற கிரனேட் தாக்குதலில் ஒருவா் காயமடைந்தாா் என்று இராணுவத் தலைமையகம் தெரிவித்தது.

திருகோணமலை-ஹபரண வீதியில் சென்ற அடையாளம் காணப்படாத வான் ஒன்றில் இருந்தவா்கள் கிரனேட்டை வீசிவிட்டுச் சென்றாா்கள் என்றும் - இதில ஓட்டோ சாரதியான, அபயபுரத்தைச் சேர்ந்த எச்.பி.தயாவீர (வயது 24) என்பவா் காயமடைந்தாா் என்றும்-அவரது ஓட்டோ சேதத்திற்குள்ளானது என்றும் - இராணுவத் தலைமைச் செய்திக் குறிப்புத் தெரிவித்தது.(ஜ-க)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



### சின்னையா நடராசா

**நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து**
**ஆண்டுகள் நான்கு சென்றாலும்**
**ஆறவில்லை எம்மனம்**
**என்றும் உங்கள் நினைவோடு**
**நாம் இங்கு வாழ்கின்றோம்.**

*உங்கள் பிரிவால் துயருறும்:*
*அன்பு மனைவி,*
*சகோதரா்கள், மைத்துனா்கள்,*
*பெறாமக்கள், மருமக்கள்.*

பெருந்தெரு,
புலோலி தெற்கு, புலோலி.
(37027)(32-11-19-26)


# Direct Start

1. Diploma in Microsoft Office — DMO — 4 months
2. Diploma in Computer Programming — DCP — 4 months
3. Diploma in Desktop Publishing — DTP — 3 months
4. Diploma in Web Design — DWD — 4 months
5. Diploma in Computerised Accounting — DCA — 3 months

**A/L பரீட்சைகளின் பின்**
**Your Next Step @ Asian**



**Registered with Ministry of Vocational Education**
மாணவரின் முதன்மை தெரிவு ஏசியன் !
- 13 ஆண்டுகள் கணினிக் கல்விச் சேவை
- அனுபவமிக்க பயிற்சியாளர்கள்
- ஒவ்வொரு மாணவரிலும் தனிப்பட்ட கவனம்
- இலவச பாடப் புத்தகங்கள்
- Transfer Facility
- தவணை முறைக் கட்டணங்கள்

Free Study Packs

ICM ENGLAND Recognised Certification

புதிய பிரிவுகள் ஒவ்வொரு வாரமும் ஆரம்பம்

# ASIAN COMPUTER SYSTEMS

| யாழ்ப்பாணம் | சுன்னாகம் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| 2 G, ஸ்ரான்லி வீதி. Tel : 021-222 5677 | 108,K.K.S.வீதி. (Jet Motors) சுன்னாகம். Tel : 071-2501589 | கொடிகாமம் வீதி. நெல்லியடி. Tel : 077-3122198 | கண்டி வீதி. சாவகச்சேரி. Tel : 077-3039587 | கணினியியல் கல்லூரி யாழ்சாலை, கிளிநொச்சி. |


## முதலாம் ஆண்டு நினைவுநாள்

தோற்றம் 24 - 10 - 1924



மறைவு 08 - 07 - 2004


### திருமதி நடராஜா பூமணி

பூங் கொடியாய்தான் படர்ந்து
புன்னகையாய் எமைச் சுமந்து
நற்பண்புதனை எமக்கு ஊட்டி
அன்பு வழிகாட்டி வந்த அம்மாவே!
பூமணி எனப் பெயர் கொண்டு
பூவுலகில் வாழ்ந்து வந்த நீங்கள்
போது மென்றா இவ்வுலகை விட்டுச் சென்றீர்கள்?
ஓராண்டு சென்றாலும் ஓயவில்லை எம்மனம் - நீரோடிச் சென்ற
ஈரவிழி காயவில்லை! மென்மையான உங்கள் பாதச் சுவடுகள்
இன்னும் எம் வீட்டில் அழியவில்லை
மெல்லியதாய் எமை அழைக்கும் குரலே
எங்கள் காதில் ஒலிக்குதம்மா!
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

உங்கள் நினைவோடு வாழும்:
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், உற்றார், உறவு,**
**நண்பர்கள்.**

இராமலிங்கம் வீதி,
முடமாவடி,
திருநெல்வேலி கிழக்கு.
(37026)(26-11-19)

## நெஞ்சகலாத நினைவலைகள்





**அமரர் இராமன் ஆறுமுகம்** **திருமதி ஆறுமுகம் தெய்வானை**

19–05–1927 ⟵ மலர்வு 13–05–1929
07–06–2004 ⟵ உதிர்வு 11–10–2003

**ஆண்டுகள் பல கடந்தாலும் ஆறவில்லை எம்மிதயம்**
**ஈண்டுமதுநினைவுடனேயே இப்பூவுலகில் வாழ்கிறோம்**
**மாண்டுநீர் போனதால் மனம்மிகக் கவலைப்படுகின்றோம்.**
**ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.**


இன்று (28.06.2005) செவ்வாய்க்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.
(37008)(42-11-34-26)

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும்
## ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### அமரர் கந்தையா பொன்னுக்கோன்



திதி : ஷஷ்டி

எங்கள் குடும்பத் தலைவர் சிவபதமடைந்ததும் ஓடோடி வந்து ஆறுதல் கூறி சகல விதத்திலும் உதவிகள் செய்தவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறிய அனைத்து உள்ளங்களிற்கும் எங்கள் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள்.

அன்னாரின் இல்லத்தில் வீட்டுக்கிருத்தியம் இன்று (28.06.2005) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறவுள்ளது. அத்தருணம் நிகழவிருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

**மலர்வு : 17.02.1923**
**உதிர்வு : 29.05.2005**

214/11. இராமநாதன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**
(37002)(51-11-19)

# 'சமுதாயக்கல்வி' என்ற கொள்கையை முன்னெடுத்துவரும் கல்வியியற்றுறை


பேராசிரியர் சின்னத்தம்பி

**தமிழர்களின் சொத்தாக விளங்குவது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். இது ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் தமிழர்களின் கல்வி மேம்பாட்டை குறிக்கோளாகக்கொண்டு பல்வேறு கல்விச் செயற்பாட்டை முன்னெடுத்து வந்துள்ளது. இந்த வகையில் இங்கு ஆரம்பிக்கப்பட்ட கல்வியியற்றுறை இருபத்தைந்து ஆண்டுகளைப் பூர்த்திசெய்துளளது. இந்தத்துறை தமிழர் கல்வி அபிவிருத்திக்கும், ஆசிரிய வாண்மைத்துவ மேம்பாட்டுக்கும், பாடசாலைக்கல்வி அபிவிருத்திக்கும், கல்வியியல் ஆராய்ச்சிகளுககும் எவ்வகையான பங்களிப்பு ஆற்றி வருகின்றது என்பது பற்றியும் அதனை கல்விப்பீடமாக மாற்றவேண்டிய தேவைபற்றியும் கல்வியியற்றுறைத் தலைவரும், கல்வியியற்றுறையின் முதுநிலை விரிவுரையாளருமான பேராசிரியர் மா.சின்னத்தம்பியுடன் கலந்துரையாடிய கருத்துக்கள் இங்கு தொகுத்துத் தரப்படுகின்றன.**

**யாழ்.**பல்கலைக்கழக கல்வியியற்றுறை இருபத்தைந்து காலப் பணியை நிறைவு செய்து தற்போது பல்வேறு வகையில் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. இந்தத்துறை பல்கலைக்கழக வளர்ச்சியோடு சேர்ந்து வளர்ச்சிபெற்ற துறையாகக் காணப்படுகின்றது. கல்வித்துறையினது பணிகள் ஏனைய துறைகளினதோ அல்லது ஏனைய பீடங்களினது பணிகளோடோ ஒப்பிடுகையில் வேறுபட்டதாக சிலவேளைகளில அமைகின்றது.

முதலாவதாக, கல்வித்துறை வாண்மைத் தொழிலான ஆசிரியத் தொழிலுடன் இணைந்த கற்கைநெறியாகக் கருதப்படுகிறது. ஏனெனில், ஆசிரியர்களை வலுவுடையவர்களாக, நவீன மாற்றத்துக்கு ஏற்ற புதியஅறிவுடையவர்களாக தமது தொழிலை மாற்றிக் கொள்ளவும், அதற்கேற்ற உளப்பாங்குடையவர்களாக, புதிய கல்வித்தொழில் நுட்பத்தை தெரிந்து கையாளக் கூடியவர்களாக மாற்றவும் உதவும் துறையாக உள்ளது.

இந்த அடிப்படையில் அத்தகைய தொழில்சார் அல்லது வாண்மை என்று அழைக்கப்படுகின்ற ஓர் உயர் கண்ணியத் தொழிலுக்கான பயிற்சியை, அதற்குரிய தேர்ச்சியை வழங்குகின்ற பணியை கல்வித்துறை இருபத்தைந்து வருடங்களாக நிறைவேற்றி வந்துள்ளது.

உண்மையில் இருபத்தைந்து வருடங்கள் என்பதை விட இருபது வருடங்கள் கல்வியியல் துறை எவ்வாறு

## தமிழர் கல்வி உயர்நிலை அடைய அதனை தனிப்பீடமாக மாற்றவேண்டும்

இருந்தது என்பது மிக முக்கியம். ஒரு சாதாரண நிலையில் தென்னிலங்கையில் கல்வித்துறை இருபத்தைந்து வருடங்கள் பணியாற்றுவதற்கும், யுத்த நெருக்கடிமிக்க - மகளுடைய வாழ்க்கைச் சமநிலை குலைந்து போன இருபது வருட காலத்துக்குள்ளும் இத்துறை மூடப்படாமல் தன்னுடைய பணியை இடைநிறுத்தாமல் செயலாற்றி வந்திருக்கின்றது என்பது மனங்கொள்ளத்தக்கதாகும்.

யுத்தநிலை மற்றும் சமூக அமைதியற்ற சூழ்நிலையில் கல்வித்துறை இயங்குவதில் பல்வேறு தடைகள் இருந்துள்ளன. எங்களுடைய அடிப்படையான உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாமல்போன ஒரு காலகட்டத்தில், குறிப்பாக போக்குவரத்து, மின்சாரவசதி இல்லாத காலகட்டத்தில் தேவையான பாடசாலைகள் தொழிற்பட முடியாத சூழ்நிலையில் ஆசிரியர்களுக்கான கல்வியை - அவர்களுடைய தொழில்சார்ந்த நுட்பத் தேர்ச்சியை வழங்குகின்ற வேலையை கல்வியியற்றுறை நிறைவேற்றி வந்துளளது.

### யுத்த சூழலிலும் பணியாற்றிய கல்வித்துறை

யுத்த நெருக்கடிகள் நிலவிய காலத்தில் கூட பாடசாலைகள் என்கின்ற சமூக நிறுவனங்களின் முக்கியத்துவம் எந்தளவிலும் குறைந்து போகவில்லை. பிள்ளைகள் தங்களுடைய அசாதாரண வாழ்வு நிலையிலும் கூட பாடசாலைக்குச் செல்வதன் மூலம் சற்று அமைதியான சூழலை பெற்றுக்கொள்வதிலும், சில நெருக்கடிகளில் இருந்து சற்று விலகி முன்னேற்றகரமான உளப்பாங்கினைப் பெறுவதிலும் பாடசாலைகளுக்கு மிகப் பாரிய பணி இருந்தது. அதுமாத்திரமன்றி கல்வி கற்பித்தல் என்ற இந்தப் பணி தற்காலிகமாக எந்தவொரு சமூகத்திலும் நிறுத்தப்படமுடியாதது. அவ்வாறு அது நிறுத்தப்படும் பொழுது மிகப் பெரிய

## பேராசிரியர் சின்னத்தம்பி கூறுகிறார்

வரலாற்று இடைவெளியை அல்லது மிகப்பெரிய முன்னேற்றத்துக்கான இடைவெளியை அது உருவாக்கிவிடும். அந்தவகையில்தான் பாடசாலைகளை ஒழுங்காக தொழிற்படுத்துவது என்ற தேவை எமது சமூகத்தினால் நன்கு உணரப்பட்டிருந்தது.




பாடசாலை இயங்குவதற்குத் தேவையான அடிப்படை அம்சம் போதுமான ஆசிரிய ஆளணியாகும். இத்தகைய ஆசிரியர்கள் இயல்பான தமது ஊக்கத்துடன் தமக்குரிய பயிற்சியைப் பெற்றுக் கற்பித்தல் வேண்டும். ஆகவேதான், இத்தகைய ஆசிரியர்களுக்குக் கல்வியியற்றுறை தொடர்ச்சியாகப் பயிற்சியளித்து வந்தது. இவ்வாறான பயிற்சி என்பது ஒரு சாதாரண பட்டதாரிகளை உருவாக்குகின்ற நோக்கத்திலிருந்து மிகவும் வேறுபட்ட கல்வியாக உள்ளது என்பதைக் கவனத்தில் கொள்ளவேணடும்.

### முழுமையான செயற்பாடு பட்டப்பின் கல்வி வழங்கல்

கல்வியியற்றுறை பட்டப்பின் கற்கைநெறியைக் கொண்டதுறை. ஏனைய துறைகளில் பட்டப்பின் தகைமைகள் வழங்கப்படுகின்றன. **M.A, M.Phill, Ph.D.** போன்ற பட்டங்கள் வழங்க ஏற்பாடுகள் இருக்கின்றன. அவை ஒரு விசேடமான ஏற்பாடுகளாக அல்லது குறுகிய அளவு நிகழ்கின்ற ஏற்பாடுகளாகவே உள்ளன. ஆனால், கல்வித்துறையைப் பொறுத்த மட்டில் அதனுடைய முழுமையான வேலையுமே பட்டப்பின் கற்கைநெறியை வழங்குவதே. இதனடிப்படையில் கல்வியில்துறையில் பெரும் எண்ணிக்கையான பட்டப்பின் டிப்ளோமா மாணவர்கள் பயின்று வருகின்றனர். குறிப்பாகக் கூறின் நாம் பயிற்றுவித்து வருகின்றோம். முழு நேர மாணவர்களாகவும், பகுதிநேர மாணவர்களாக பயிற்றுவித்து வருகின்றோம். அதேவேளை, கல்வியியற்றுறை **M.Phill** கற்கை, கலாநிதிப் பட்டம் என்பவற்றை வழங்கி வருவதுடன் ஏற்கனவே, பலரை உருவாக்கியுள்ளது. இது ஒரு விசேடமான ஒரு சாதனை என்றே கூறவேண்டும். முக்கியமாக இலங்கையில் தமிழ்மொழி மூலமான கற்கைநெறிகளை நடத்துவதில் தலைமை நிலையமாக யாழ். பல்கலைக்கழக கல்வித்துறை விளங்குகின்றதெனில் மிகையாகாது.

கல்வி அமைச்சு, தமிழ்மொழி மூலமான கல்வி டிப்ளோமா ஆசிரியர்களை பயிற்றுவிப்பதானால் முதலில் எமது துறையுடன்தான் தொடர்புகொள்கினறது. அதுமட்டுமன்றி துறையின் அனுமதியுடனேயே அதனை நடைமுறைப்படுத்துகின்றது. வழக்கு - கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சுக்கூட ஆசிரிய பயிற்சி தொடர்பாக அல்லது விடுமுறைகள் தொடர்பான விடயங்களை தீர்மானிக்கின்ற போது தமிழர்களுக்கான ஆசிரிய பயிற்சிக் கல்வியின் தலைமையான நிறுவனம் என்ற வகையில் யாழ்.பல்கலைக்கழக கல்வியியல் துறைக்குள்ள அங்கீகாரம் சிறப்பானதாகவே உள்ளது.

### தேசிய அளவிலான கல்வி விரிவாக்கம்

பல்வேறு நெருக்கடிகள் நிலவிய காலத்திலும் சரி, ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின்னரும் ஏற்பட்ட ஒரு தறகாலிக இடைவெளியைப் பயன்படுத்தி வவுனியா வளாகத்திற்கு எங்களுடைய கற்கைநெறியை விரிவுபடுத்தி இருநதோம். அது தேசிய ரீதியில் எங்களுடைய துறையின் பங்கு எவ்வாறானது என்பதை சமூகம் உணர்ந்து கொள்ளவைத்தது. வவுனியா வளாகததில் டிப்ளோமா கற்கை, **M.ED.** கற்கை என்பன நடத்தப்படுகின்றன. தென்னிலங்கையில் இருந்தும், மலைநாட்டில் இருந்தும், மேல் மாகாணத்தில் இருந்தும் கிழக்கு மாகாணத்தில் இருந்தும் பெரும் எண்ணிக்கையானோர் அங்கு வந்து கற்பதைக் காண முடியும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்வித்துறை தன்னுடைய சேவையை யாழ்ப்பாணத்துக்குள்ளேயே மட்டுப்படுத்திக் கொண்டது என்ற தவறான கருத்து இருக்குமானால் அதனை மாற்றிக் கொள்வதற்குரிய ஓர் உதாரணமாக இதனைக் கொள்ளலாம். அந்தவகையில், தேசிய ரீதியிலான கல்வித்துறை என்ற பங்கை நாம் பெற்றுவருகின்றோம்.

அண்மைக் காலமாக, மிகவும் முக்கிய பணி ஒன்றும் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. அந்தப்பணியாதெனில் கடந்த இரண்டு வருடங்களாக கல்வியியல் துறை மாணவர்களுக்கான விசேட பயிற்சி ஏற்பாடுகள் கொழும்பு பல்கலைக்கழக கல்விப் பீடத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டு வருகின்றது. ஆசிரியர் கல்வி என்பது தேசிய நீரோட்டத்தில் இருந்து விலகாமல் இருப்பது என்பது மிகவும் முக்கியம். அந்தவகையில், இலங்கையின் தலைசிறந்த ஆசிரியர் கல்விநிறுவனமான கொழும்பு பல்கலைக்கழக கல்விப்பீடத்துடன் இணைந்து எமது கல்வி முதுமாணி மாணவர்களுக்கான விசேட வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த விரிவுரைகள் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிமூலம் நடத்தப்படுகின்றன.

இதனூடாக யாழ்.பல்கலைக்கழகக் கல்வித்துறை வாய்ப்புக் கிடைக்கின்ற பொழுதெல்லாம் தேசிய ரீதியாக தன்னுடைய பணியை விரிவுபடுத்திக் கொள்கின்றது என்பதையும் கல்வியை ஒன்றிணைத்து அகலப்படுத்திக் கொள்கின்றது என்பதையும் விளங்கிக் கொள்ளமுடியும். மேலும், யாழ்.பல்கலைக்கழக கல்வியியல் துறை தனியே கற்பித்தலில் மட்டும் நின்று விடுவதில்லை. பொதுவாக தேசிய, பிராந்திய, உள்ளூர் மட்ட கருத்தரங்குகளிலும் குறிப்பாக, ஆசிரியர்களை முன்னேற்றுவது - பாடசாலைகளை முன்னேற்றுவது தொடர்பான பல்வேறு செயலமர்வுகளில் எமது சகல விரிவுரையாளர்களும் கலந்து கொண்டு வள ஆளணியினராகச் செயற்பட்டு வருகின்றனர்.

ஆசிரியர்களை வலுவானவர்களாக மாற்றுவது, கற்பித்தல் திறனுடையவர்களாக மாற்றுதல் என்ற நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட ஆசிரிய நிலையங்களில் எமது துறை விரிவுரையாளர்கள் வளப் பேராளர்களாகப் பங்குகொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ஆசிரியப் பயிற்சி நிறுவனங்களிலும் இந்தச் சேவை தொடர்கின்றது. மேலும், எமது துறை சார் விரிவுரையாளர்கள் ஆராய்ச்சி வல்லுநர்களாகவும் பலநூல்களை வெளியிட்டும் வருகின்றமையைக் காண முடியும். குறிப்பாக, பேராசிரியர் சபா ஜெயராசா பல நூல்களை வெளியிட்டு வருகின்றமை சிறப்பான அம்சமாகும்.

**பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்**

(தொடரும்)

## கல்விச்சாலைக் காட்சிகள்



நீர்வேலி ஸ்ரீ முருகன் அறநெறிப் பாடசாலையின் முதலாம் ஆண்டு நிறைவு விழா அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் பஜனை செய்வதைப் படத்தில் காணலாம்.

(ஐ-12)



நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாசாலை மேற்பிரிவு மாணவர்களின் இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வீ.மகேந்திரன் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் வித்தியாலய அதிபர் ச.சத்தியவரதன், கோட்டக்கல்விப் பணிப்பாளர் க.அரசரத்தினம், ஆசிரியர் றெட்னராஜ் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படம்: மண்டைதீவுச் செய்தியாளர்)



வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தின் யாழ். பிரதேச முன்பள்ளிகளின் பேச்சுத்திறன் காணும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் கலந்து கொண்ட சிறாருக்கு கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் செல்வி மலர் சின்னையா பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

(ஐ-204)



சங்கானை ஜுப்பீற்றர் கழகத்தின் முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா அண்மையில் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

நிகழ்வில், மரக்கிளையில் உருவங்களைக் கட்டித் தொங்கவிடும் சிறார்களையும், முதலில் உருவங்களை கட்டிமுடித்த சிறுமி ஒருத்தி வெற்றிக் கம்பத்தை நோக்கி ஓடுவதையும் படத்தில் காணலாம்.

(படம் - சங்கானைச் செய்தியாளர்)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் உயர்தர வகுப்பு மாணவர்களின் ஒன்றுகூடலும் 'ஒளியை நோக்கி' என்ற சஞ்சிகை வெளியீடும் அண்மையில் நடைபெற்றன.

இந்நிகழ்வில் தலைமைஉரை நிகழ்த்தும் மாணவர் மன்றத் தலைவி ஜீ. விஜிதா மற்றும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களைப் படத்தில் காணலாம்.

(படம்:குடத்தனைச் செய்தியாளர்)

## வெங்காயப் பயிரில் ஏற்படும் நோய்த்தாக்கத்தை இனங்காண உதவி

வலி.தெற்கு,ஜுன்28

வெங்காயப் பயிரில் தொடர்ச்சியாக இடம்பெறுவரும் நோய்த்தாக்கத்துக்கான காரணத்தைக் கண்டுபிடிப்பதற்கான பரிசோதனைகளை மேற்கொள்ளவெனத் தேவையான விவசாய நிலத்தை ஒதுக்கித்தர சங்குவேலி விவசாய சம்மேளனத் தலைவர் செ.ஈஸ்வரன் முன்வந்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் வெங்காயச் செய்கை அண்மைக்காலமாக பல்வேறு நோய்த்தாக்கங்களுக்கு உள்ளாவது இனங்காணப்பட்டுள்ளது. இதனால், வெங்காயச் செய்கையாளர்கள் பாரிய நஷ்டத்தை எதிர்கொள்வதும் தெரிந்ததே.

இயற்கை அழிவுகளால் மட்டுமல்ல, பங்கஸ நோய்களாலும் பூச்சி, புழுக்கள் போன்ற கிருமிகளாலும் தொடர்ச்சியான பாதிப்புகள் வெங்காயச செய்கையாளருக்கு ஏற்பட்டு வருகின்றன.

வெங்காயச் செய்கையில் ஏற்படும் நோய்த்தாககத்துக்கான காரணத்தைக் கண்டுபிடிக்க வசதியாக யாழ்ப்பாணம் விவசாய திணைக்களத்தினருக்கு சங்குவேலியில் உள்ள தமது தோட்ட நிலத்தில் மாதிரித் துண்டச் செய்கை மேற்கொள்வதற்கு ஒரு தொகுதி நிலத்தை ஒதுக்கித் தருவதாக சம்மேளனத் தலைவர் தெரிவித்துள்ளார்.

தமது இந்த முடிவினை விவசாயத் திணைக்களத்தினருக்குத் தெரிவித்து உரிய மேல்நடவடிக்கைகளை எடுக்குமாறு உடுவில் கமநல சேவை நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் எஸ்.சோதிநாதனிடம் சம்மேளனத் தலைவர் கோரியுள்ளார் எனத் தெரிவித்தார். (எ-152)

## தொல்புரம் வைத்தியசாலையில் சிற்றூழியர் பற்றாக்குறை

தொல்புரம்,ஜுன்28

தொல்புரம் பாணாவெட்டி அரசினர் வைத்தியசாலையில் கடந்த சில வருடங்களாக சிற்றூழியர் பற்றாக்குறை நிலவிவருகிறது.

சுழிபுரம், வட்டுப்பிளவத்தை,தொல்புரம் ஆகிய ஊர்களைச் சேர்ந்த மக்கள் இந்த வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன், கர்ப்பிணிகள் கிளினிக்கும் இங்கு நடைபெற்று வருகிறது.

எனினும் ஒரே ஒரு சிற்றூழியர் மட்டுமே இங்கு கடமையில் அமர்த்தப்பட்டிருப்பதனால் நோயாளர்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே மேற்படி வைத்தியசாலையில் மேலும் இரண்டு சிற்றூழியர்களையாவது கடமைக்கு அமர்த்தி நோயாளர்களின் சிரமங்களைத் தீர்ப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. (எ-119)

## வடிசாலையின் புனரமைப்புக்கு ஜி.ரி.இசற் நிதியுதவி

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கத்தின் கிந்து சிட்டி வடிசாலையைப் புனரமைக்க ஜி.ரி.இசற் நிறுவனம் 35 இலட்சம் ரூபா நிதியினை வழங்கவுள்ளது.

கடந்த கால இராணுவ நடவடிக்கையால் சேதமடைந்த வடிசாலையின கட்டடங்களைப் புனரமைக்கவும்- இயந்திர சாதனங்களைக் கொள்வனவு செய்வதற்கும்- இந்த நிதி பயன்படுத்தப்படுமெனக் கூறப்பட்டது.


ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்

பண்டிதர் நரசிம்ம நாயுடு

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வருகைதந்துள்ளார் சர்வதேச ஜோதிடர்.

இவர் கைரேகை மூலமாக - நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், கல்வி, கணவன் - மனைவி ஒன்று சேர்தல், வெளிநாட்டுப் பயணம் பற்றியும் மற்றும் எதிர்காலப் பலன்களையும் அறிந்துகொள்ள நாடுங்கள்: பிள்ளையார் இன், (36807) (26-11-13)

அறை எண் 9,
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 077 9122836.

திருமணக் கார் (குளிரூட்டியது) வாடகைக்கு



★ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
★ விசேட வைபவங்கள் ★ சுற்றுலாக்கள்
போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய [ஆங்கில இலக்கம் கொண்ட] குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்குக் கிடைக்கும்.

T.P.: 0777 - 903090, 077-3086939, 0777-246117, 077-6018467.

தொடர்பு: ஜா.கணேஸ், சோமசுந்தரம் பாலர் பாடசாலை, 22,சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

இயந்திர மூலம் குழாய்க்கிணறு அமைத்தல்


இயந்திர மூலம் 6" விட்டமான குழாய்க்கிணறு 3 மணித்தியாலத்தில் அமைத்துக் கொடுக்கப்படும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

ந. பாலகிருஷ்ணன்
கலைவாணி மில் ஒழுங்கை
(Farm School Lane),
கொக்குவில் கிழக்கு. கொக்குவில்.
T.P:- 0777290266, 0777512943
(36937) (54-

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 23 05 1927 — மறைவு 29 05 2005



அமரர் கணபதிப்பிள்ளை செல்லத்துரை

எந்நாளும் நாம் வாழ வழிகாட்டிய தந்தையே!
வானுலகில் நின்று வழிநடத்திப் பெறுக
நின் ஆத்மசாந்தி!

29.05.2005 அன்று காலமான எமது தெய்வத்தின் நினைவாக இன்று (28.06.2005) செவ்வாய்க்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியம், ஆத்மசாந்திப் பிரார்த்தனை மற்றும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கந்தரோடை மேற்கு, சுன்னாகம். T. P: 0602213298

மனைவி–அன்னம்மா, பிள்ளைகள்.

(36601) (54-11-19)

இந்தியாவில் உயர்கல்வி வாய்ப்பு

Muthayamal Educational Institutions

RASIPURAM - 637 408. NAMAKKAL - (DT) TAMILNADU. www.muthayammal.com



இந்தியாவில் பிரபல்யமான முத்தயம்மாள் கல்வி நிறுவனமானது **ANNA (Engineering) UNIVERSITY - PERIYA UNIVERSITY** ஆகியவற்றின் பட்டதாரி **(Degree Courses)** நெறிகளை வழங்கி வருகிறது. இலங்கையில் A/L சித்தியடைந்த மாணவர்கள் இக்கல்லூரியில் பின்வரும் நெறிகளில் சேர்ந்து உலகளாவியரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பட்டதாரியாக வாய்ப்பு.

| பாடநெறி | காலாண்டுகள் | உட்பிரவேச தகைமைகள் |
|---|---|---|
| B.E. Computer Science & Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electronics & Communication Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electrical & Electronics Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electronics & Instrumentation Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Mechanical Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Tech Information Technology | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Computer Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Information Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc.Biochemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc.Microbiology | 3 Years | A/L Passes in Physics Chemistry, Biology |
| B.Sc. Biotechnology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Bio-Informatics | 3 Years | A/L Passes in Physics, Chemistry,Maths |
| B.Sc. Maths | 3 Years | A/L Passes in Maths,Chemistry,Physics |
| B.Sc. Physics | 3 Years | A/L Passes in Maths, Physics |
| B.Sc. Electronics | 3 Years | A/L Passes in Physics, Chemistry,Maths |
| B.Sc. Chemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry |
| B.Sc. Computer Science | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Computer Applications (B.C.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com. (CA) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Business Administration (B.B.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com. | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.C.S. | 3 Years | Pass in All Subjects in any Discipline |

2005 A/L மாணவர்கள் pending results உடன் விண்ணப்பிக்கலாம்.

O/L மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் **Kaveri Polytechnical College**ல் சேர்ந்து 3 வருட **Diploma**வை பூர்த்திசெய்து, மேலும் 3 ஆண்டுகளில் **Engineer** ஆக வாய்ப்பு.

A/L 2005 மாணவர்கள் pending results முறையில் ஜுலை மாதத்திலே கல்லூரியில் சேர்ந்து பாடநெறியை தொடங்க வாய்ப்பு

Call: 0777-767818 / (011)4512591 For prospectus and application forms

SCHOLARS INFORMATION CENTER
2nd Floor, Colombo Plaza, 50, Galle Road, Colombo-06.
email : peter@scholars-info.com

ஓராண்டு நினைவு...





அமரர் சின்னத்தம்பி மகாராசா
மண்ணில்: 11.03.1950
விண்ணில்: 21.06.2004

அமரர் மகாராசா பகீரதன்
மலர்வு: 15.06.1992
உதிர்வு: 11.09.2003

ஒரு கூட்டுக்கிளிபோல் வாழ்ந்தும்
மூன்று குஞ்சுகளின் இளைய குஞ்சு
இறையருள் சேர்ந்தார்
பொறுக்கமுடியாத இறைவன்
தலைமையையும் இறையருள்
சேர்த்தார். துன்ப துயரத்தில்
கண்ணீர் விடும் மனைவி
பிள்ளைகள் ஆன்மாவின்
சாந்திக்காக இறைவனை
வேண்டுகின்றோம்.

குமரநகர், கைதடி மத்தி, கைதடி.

தகவல் குடும்பத்தினர்.


(36991) (54-

# 'அஸ்ரா' கிண்ண கிரிக்கெட் ஆட்டம்: யாழ். மத்தி, ஹாட்லி அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம்,ஜூன்28

அஸ்ரா கிண்ணத்துக்காக பாடசாலை அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் கடந்தவாரம் நடந்த இரு ஆட்டங்களில் யாழ். மத்திய கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி ஆகியன வெற்றிபெற்றன.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடந்த ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கிளிநொச்சி மகாவித்தியாலய அணி மோதியது.



முதலில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மகாவித்தியாலய அணி சகல விக்கெட்டையும் இழந்து 88 ஓட்டங்களைப் பெற்றது.

ஜெயசீலன் 11 ஓட்டங்களையும் தியோனி, 26 ஓட்டங்களையும் அனுஷன் 8 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

டானியல் நிதர்சன் 11 ஓட்டங்களினைக் கொடுத்து 6 விக்கெட்டினையும் வியாஷன் 10 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் விணோத்குமார் 10 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டையும் நவநீத் 13 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி 4 விக்கெட்டினை இழந்து 205 ஓட்டங்களைப் பெற்றது.

சுதர்சன் 87 ஓட்டங்களையும் நவநீத் 44 ஓட்டங்களையும் வினோத்குமார் 39 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

ஆனற்டிலக்சன் 55 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டினை வீழ்த்தினார்.

யாழ். மத்திய கல்லூரி அணி கிளிநொச்சி மகாவித்தியாலய அணியை இரண்டாம் இன்னிங்ஸிற்காக மீண்டும் துடுப்பாடப் பணித்தது.

இதில் கிளிநொச்சி மகாவித்தியாலய அணி 3 விக்கெட்டினை இழந்து 60 ஓட்டங்களினைப் பெற்றது.

ஜயசீலன் 17 ஓட்டங்களையும் ஆனற்டிலக்சன் 15 ஓட்டங்களையும் ரவிக்குமார் 20 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

டனியர் நிதர்சன் 8 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வியாஷன் 12 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும், தயான் 11 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மற்றோர் ஆட்டத்தில் சென் ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து ஹாட்லிக் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லிக் கல்லூரி சகல விக்கெட்டினையும் இழந்து 147 ஓட்டங்களினை பெற்றது.

கோகிலவரதன் 28 ஓட்டங்களினையும், பிரசன்னா 23 ஓட்டங்களினையும் றஜீவன், 17 ஓட்டங்களினையும், பூங்குன்றன் 17 ஓட்டங்களினையும், அரன் தொம்சன், 11 ஓட்டங்களினையும் தமது அணிக்காகப் பெற்றனர்.

ஆக்ஷோயன் 35 ஓட்டங்களினை கொடுத்து 3 விக்கெட்டினையும் லனுக்சன் 21 ஓட்டங்களினைக் கொடுத்து 3 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்ஜோனஸ கல்லூரி அணி சகல விக்கெட்டினையும் இழந்து 106 ஓட்டங்களைப் பெற்றது.

கௌதமன் 22 ஓட்டங்களினையும், பினோஸ்குமார் 30 ஓட்டங்களினையும், வேன் வினோதன் 16 ஓட்டங்களினையும், யனுஸ்கன் 15 ஓட்டங்களினையும் பெற்றனர்.

சதீஸ் 24 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் றஜீவ்குமார், 18 ஓட்டங்களினைக் கொடுத்து 5 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

ஹாட்லிக் கல்லூரி அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 3 விக்கெட்டினை இழந்து 48 ஓட்டங்களினைப் பெற்றது. கோகிலவரதன ஆட்டம் இழக்காமல் 17 ஓட்டங்களையும் தொம்சன் 17 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றனர்.

ஆக்சோயன் 9 ஓட்டங்களினைக் கொடுத்து ஒரு விக்கெட்டினையும் தினேஸ்குமார் 16 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் கிருஷாந் 10 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

போட்டி வெற்றி தோல்வியின்றி முடிந்த போதும் முதல் இன்னிங்ஸில் ஹாட்லிக் கல்லூரி அணி வெற்றி பெற்றதினால் அந்த அணிக்கு வெற்றியளிக்கப்பட்டது. இச்சுற்றுப்போட்டியில் முதல் இன்னிங்ஸ் முடிவுப்படியே வெற்றி வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (3-190)

## விளையாட்டு விழா

சுழிபுரம்,ஜூன்28

சங்கானை - II குடும்ப முன்பள்ளிச் சிறார்களின விளையாட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சங்கானை கலாசார மண்டப முன்றிலில் நடைபெறவுள்ளது.

முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டுநிலைய சங்கானைக் குடும்பத் தலைவி திருமதி விபோலினி றமேஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வலி.மேற்குப் பிதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (3-28-203)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்28

திருநெல்வேலி ஞானக்குழந்தை இல்லத்தின் 13ஆவது வருட விளையாட்டுவிழா நாளை புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பொறுப்பாசிரியர் செல்வி ஜெ.ஜெகஜனனி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.ரவீந்திர சர்மாவும் சிறப்பு விருந்தினராக திருநெல்வேலி மேற்கு கிராம அலுவலர் பி.ஆர்.ஜேசுதாசன், பாலர் கல்விக்கழகத் தலைவர் திருமதி எஸ்.ஜெயபாலசிங்கம் ஆகியோரும் கலந்துகொள்வர். (3-203)

# பருத்தித்துறை உதைபந்தாட்டம்: வெற்றி பெற்ற அணிகள்

கரவெட்டி,ஜூன்28

தமிழீழ விளையாட்டுத்துறையின் வடமராட்சிப் பிரிவின் ஆதரவுடன் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் முதல் சுற்று ஆட்டங்கள் பொமேர்ஸ் வி.க. மைதானத்தில் தினமும் நடைபெற்றுவருகின்றன.



பெரும் எண்ணிக்கையான ரசிகர்கள் தினமும் கூடி ஆட்டக்காரர்களுக்கு உற்சாகம் அளித்து வருகின்றனர்.

கடந்தவாரம் நடந்த ஆட்டங்களின் சில முடிவுகள் வருமாறு:-

★ சுடர்ஒளி வி.கவும் தென்மராட்சி காந்தி வி.கவும் மோதியதில் சுடர்ஒளி வி.க 2-1 கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

★ கொலின்ஸ் வி.கவும் கலைமகள் வி.கவும் மோதியதில் கொலின்ஸ் வி.க. 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

★ கரணவாய் வி.கவும் காளி அம்பாள் வி.கவும் மோதவிருந்த ஆட்டத்தில் உரிய நேரத்தில் காளி அம்பாள் வி.க. மைதானத்திற்கு சமுகமளிக்காமையால் கரணவாய் மத்தி வி.கவுக்கு வெற்றி வழங்கப்பட்டது.

★ கலைமதி வி.கவும் தென்மராட்சி வி.கவும மோதியதில் கலைமதி வி.க. 6-1 கோல்கணக்கில் வெற்றிபெற்றது.

★ அன்னை வி.கவும் பொமேர்ஸ் வி.கவும் மோதவிருந்த ஆட்டத்தில் அன்னை வி.க.போட்டிக்கு சமுகமளிக்காமையால் பொமேர்ஸ் வி.கவிற்கு வெற்றி வழங்கப்பட்டது.

★ பருத்தித்துறை ஐ.வி.கவும் கரவை சுடர் வி.கவும் மோதியதில் பருத்தித்துறை ஐ.வி.க. 4-1 கோல்கணக்கில் வெற்றிபெற்றது.(3-70-203)

# நியூஸ்ரார் அணியை வென்றது தர்மபுரம் இளந்தாரகை அணி

அமரர் சத்தியதர்ஷின் பூஜிதா நினைவாக 2005ஆம் ஆண்டுக்கான வெற்றிக் கிண்ணத்திற்காக நடத்தப்பட்ட மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இளந்தாரகை அணி வெற்றி பெற்று பூஜிதா வெற்றிக் கிண்ணத்தை தட்டிக் கொண்டது.

மென்பந்து கிரிக்கெட் போட்டியில் யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வருகைதந்து பல விளையாட்டுக்கழக அணிகள் பங்குகொண்டன.

இந்தப் போட்டியின் இறுதியாட்டத்திற்கு கிளிநொச்சி நியூஸ்ரார் அணியும் தர்மபுரம் இளந்தாரகை அணியும் தெரிவு செய்யப்பட்டு போட்டியிட்டன.

20 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இளந்தாரகை அணியினர் நியூஸ்ரார் அணியினரை துடுப்பாட அழைத்தனர்.

20 ஆவது பந்துப் பரிமாற்ற முடிவில் நியூஸ்ரார் அணியினர் 8 இலக்குகளை இழந்து 94 ஓட்டங்களைப் பெற்றனர். குகனேஸன் 11 ஓட்டங்களையும், குககாந் 24 ஓட்டங்களையும், சுதாகரன் 17 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்கு 95 ஓட்ட இலக்கைக் கொண்டு களமிறங்கிய இளந்தாரகை அணியினர் ஆரம்பத்திலேயே தமது ஓட்டங்களைக் குவித்தனர். இருப்பினும் நியூஸ்ரார் அணியினரின் லாவகமான பந்து வீச்சினால் ஓட்டவேகம் மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்தது.

இளந்தாரகை அணியினர் அபார ஆட்டத்தினால 18.3 பந்துப்பரிமாற்ற முடிவில் 06 விக்கெட்டை இழந்து 95 ஓட்டங்களைப் பெற்று 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றனர்.

சாரங்கன் 35 ஓட்டங்களையும் யோகீசன் 28 ஓட்டங்களையும் பெற்றனர்.

சுற்றுப்போட்டியில் தொடர் ஆட்டநாயகனாக, 60 ஓட்டங்களையும் 06 விக்கெட்டுக்களையும் பெற்ற லோகேஸ்வரன் தெரிவுசெய்யப்பட்டார்.(3-305-203)

## கரும்புலிகள் நினைவுக் கரபந்தாட்டம்:

# விக்கினேஸ்வராவை வென்றது நவஜீவன்ஸ் வி.க.அணி!

கரவெட்டி,ஜூன்28

தமிழீழ விளையாட்டுத் துறையின் ஆதரவுடன் வடமராட்சி கரபந்தாட்டச் சங்கம் கரும்புலிகள் நினைவாக மின்னொளியில் நடத்திவரும் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில முதலாவது ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் வி.க. வெற்றி பெற்றது.

கடந்த சனிக்கிழமை ஆரம்பமான இச் சுற்றுப்போட்டியில் முதலில் நடந்த ஆட்டத்தில உடுப்பிட்டி நவஜீவன்ஸ் வி.கவும் விக்கினேஸவரா வி.க.வும் மோதின.

இந்த ஆட்டத்தில் நவஜீவன்ஸ் வி.க.அணி 25:05 செற் கணக்கில் வெற்றி பெற்றது.

இச்சுற்றுப் போட்டியின் ஆரம்ப நிகழ்வில் பொதுச்சுடரை வடமராட்சி விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் பிரியன், ஈகச்சுடரை 2ஆம் லெப்அக்கினோலின் தாயார் மகேந்திரன் யோகேஸ்வரி ஆகியோரும் - தேசியக் கொடியை வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இன்பனும்- ஏற்றினர். (3-70)

## விளையாட்டு

# பெரியபுலம் மாணவன் அரைச்சதம் அடித்தார்

வலி.வடக்கு,ஜூன்28

யாழ்ப்பாணம் பெரியபுலம் மகாவித்தியாலய மாணவன் க.கஜந்தன் 15 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே அஸ்ராக் கிண்ணத்திற்காக இடம்பெற்றுவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அரைச்சதம் அடித்துள்ளார்.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிக்கும் யாழ். பெரியபுலம் மகாவித்தியாலயத்துக்குமிடையே இடம்பெற்ற 15 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் இந்த அரைச்சதம் பெறப்பட்டுள்ளது. (3-86)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்28

தமிழீழ விளையாட்டுத் துறையின் வடமராட்சிப் பிரிவின் ஆதரவில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:

★ பிற்பகல் 3.30 மணி - சிவன் வி.க.எதிர் ஞானம்ஸ் வி.க.

★ பிற்பகல் 4.30 மணி - யங்கென்றீஸ் வி.க. எதிர் பொலிகை பாரதி வி.க. (3- 203)

★ ★ ★

கரவெட்டி,ஜூன் 28

கரும்புலிகள் நினைவாக தமிழீழ விளையாட்டுத்துறையின் ஆதரவுடன் வடமராட்சி கரபந்தாட்டச் சங்கம், உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் நடத்திவரும் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

★ இரவு 8 மணி - பாரதி வி.க. எதிர் விவேகானந்தா வி.க.


★ இரவு 8.30 மணி - இந்து இளைஞர் வி.க. எதிர் பருத்தித்துறை ஐக்கிய வி.க.

★ இரவு 9 மணி - கலைவாணி வி.க.. எதிர் கலைமதி வி.க.

★ இரவு 9.30 மணி - இரவு 8 மணிக்கும் 8.30 மணிக்கும் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெறும் அணிகள். (3-70-203)

★ ★ ★

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம், யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை ஆகியவற்றின் அனுசரணையுடன் கோண்டாவில் கிழக்கு மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம் தனது விளையாட்டு மைதானத்தில் யாழ். மாவட்ட ரீதியில் லீக்முறையில் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன் மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ள ஆ த தில் இணுவில் அண்ணா வி.கவும் இணுவில் கலாஜோதி வி.கவும் மோதுகின்றன.(3-75-203)



தமிழீழ விளையாட்டுத்துறையின் ஆதரவுடன் வடமராட்சி கரபந்தாட்டச் சங்கம் கரும்புலிகளின் நினைவாக உடுப்பிட்டி சிவகுமரன் மைதானத்தில் மின்னொளியில் நடத்தும் கரபந்தாட்டப் போட்டியின் ஆரம்ப நிகழ்வில் தேசியக்கொடியை வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இன்பன் ஏற்றுவதையும் - மாவீரர்களுக்கான ஈகச்சுடரை மாவீரர் 2ஆம் லெப்ரினன் அக்கினோலின் தாயார் ஏற்றிவைப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: சி.சுந்தரலிங்கம், கரவெட்டிச் செய்தியாளர்)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வங்கியின் வாடிக்கையாளர்கள், பொதுமக்கள் நலன் கருதி தனது சேவையை சிறந்த முறையில் ஆற்றிவரும் சங்கானை மக்கள் வங்கியின் முகாமையாளர்

**திரு.பொன்னையா அச்சுதம்பிள்ளை அவர்கள்**

நேற்று (27.06.2005) அகில இலங்கைச் சமாதான நீதிவானாக யாழ்ப்பாணம் பதில் மாவட்ட நீதிபதி திருமதி எஸ்.நந்தசேகரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டமையையிட்டு வாழ்த்தும் பாராட்டும் தெரிவிப்பதோடு, அவர் நீண்ட ஆயுளுடன் வாழ்வதற்கும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

(37059) (39-42-16-18) *ஏட்வேட் வில்சன்*, மேரி பல்பொருள் வாணிபம், சங்கானை.

## மனதார வாழ்த்துகின்றோம்



எமது வங்கியின் முகாமையாளராகச் சேவையாற்றி அன்போடும், பண்போடும் எம்மை வழிநடத்திவரும்

**திரு.பொன்னையா அச்சுதம்பிள்ளை அவர்கள்**

அகில இலங்கைச் சமாதான நீதிவானாக நேற்று [27.06.2005] திங்கட்கிழமை யாழ்ப்பாணம் பதில் மாவட்ட நீதிபதி திருமதி எஸ்.நந்தசேகரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துள்ளமையையிட்டு வங்கி ஊழியர்கள் சார்பில் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு, இவரது சேவை மேன்மேலும் விருத்தியுற ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(37057) (39-16-33-42) ஊழியர் நலன்புரிச் சங்கம்,மக்கள் வங்கி, சங்கானை.

## மலிவு விற்பனை

- **Panasonic** -SC - VK 61D - DVD Stereo System (Five DVD Changer)
- **Teac** - MC - D68 micro Hi Fi system Multi function display (Singapore Used)
- **HIND P.A. System** (HSS - 90) Amp System (with Speakers and Mic)
- **VISIONTEK 61A - P C O Conference Unit** (Connecting Phone)
- **BELKIN - Blue tooth USB Adapter**, 10 Meter
- **Casio Digital Diary** (IMB)
- **Computer Tables** (Singapore)
- **Communication Booth**

**34, SADDANATHAR ROAD, NALLUR, JAFFNA.**

T.P.: 021 - 2223786, 077 - 708498 (hotline)

(C/43694)(26-16-18-33-42)

## மரண அறிவித்தல்

### கந்தையா பாக்கியநாதன்

**(லிகிதர், தொழில்நுட்பக் கல்லூரி, கொக்குவில்)**



அல்வாயைப் பிறப்பிடமாகவும் ஏழாலை தெற்கை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா பாக்கியநாதன் அவர்கள் நேற்று (27.06.2005) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கந்தையா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் வேலும் மயிலும் - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் மல்லிகாவின் அன்புக் கணவரும் கமலாதேவியின் அருமைச் சகோதரனும் பிந்தியா, லிவிந்தியா, டினேஷ்குமார், றொமேஷ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் மனோகரன் (பிரான்ஸ்), மனோரஞ்சிதம் (பிரான்ஸ்), மனோகரி, வைத்திய கலாநிதி வேலும் மயிலும் ஆகியோரின் அன்பு மைத்துனரும் செல்லம்மா, கனகம்மா ஆகியோரின் பெறாமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2005) செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: திருமதி பா.மல்லிகா (மனைவி), பிள்ளைகள்.

*ஏழாலை தெற்கு, சுன்னாகம்.* (37034)(42-16-18)

## தேவை

பிரபல தனியார் பாடசாலை ஒன்றிற்கு சுறுசுறுப்புடனும் பொறுப்புடனும் வேலை செய்யக் கூடிய இளம் பணிப்பெண் தேவை. புதன், வியாழன் ஆகிய நாள்களில் நேரில் வரவும். பாடசாலைக்கு அருகில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

**140, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.**

(37055)(39-16-18-42)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

மருதனார்மடம் உடுவில் வீதியில் பெறுமதிமிக்க தங்க ஆபரணங்கள் நேற்று 27.06.2005 அன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

முகவரி: **க.தர்மலிங்கம்**

சுதுமலை மலைவேம்படி, (5 கடை தொடர் கட்டடம்).

(37053)(42-16-18)

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் வீதி, உரும்பிராய்மேற்கு, விளாத்தியடியில் சகல வளங்களுடனும் கூடிய 9 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**0779221179, 4590411**

தொடர்புகளுக்கு:

**முருகையா துர்க்காதரன்**

விதானையார் ஒழுங்கை, உரும்பிராய் வடக்கு.

(37045)(42-16-18)

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவன ஆங்கில ஆசிரியை செ.இராஜேஸ்வரி அவர்களின் தாயார்

திருமதி

**செல்லையா மாருதப்புரவீகவல்லி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*The Express Institute* Irupalai, Kopay.

அதிபர், ஆசிரியர், ஆளணியினர்.

[37009]

### அபிவிருத்தி ஒன்றியத்தின் கலந்துரையாடல்

வரணி,ஜூன்28

தென்மராட்சி கிழக்கு பிரதேச அபிவிருத்தி ஒன்றியத்தின் விசேட கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

தற்சமயம் கொடிகாமத்தில் இயங்கும் தற்காலிக பிரதேச செயலகம் சார்பான திட்ட வரைபுகள் பற்றி கலந்துரையாடல் மூலம் ஆராயப்பட்டு சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு மகஜர் சமர்ப்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இக்கலந்துரையாடலுக்கு மேற்படி பிரதேச மக்கள், தென்மராட்சி பிரதேச செயலர் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அழைக்கப்பட்டுள்ளனர் என ஒன்றியத்தின் அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-170)

## மணிவிழா நாயகனை உளம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



பல்வேறுபட்ட அரங்க ஆற்றுகைக்கு இசை அமைக்கும் ஆளுந்திறன் படைத்தவரும் - தனது இசையமைப்பினால் காலத்தால் அழியாத பல இனிய பாடல்களைத் தந்தவரும் ஆகிய

**எம்.ஜேசுதாசன்**

அவர்கள் ஆற்றியுள்ள பணிகளும் ஈட்டியுள்ள சாதனைகளும் இவரது அறுபதாண்டு தொடக்கத்தினைப் பாராட்ட வேண்டிய தேவையை எமக்கு நினைவூட்டி நிற்கின்றன.

வயதால் பழைய தலைமுறையினரானாலும் உணர்வுகள் புதிய தலைமுறையினரான யேசுதாசன் அவர்கள் இப்பணியில் இன்றும் தொடர்கின்றார். அவர் இன்னமும் தொடர்வார் என்ற நம்பிக்கையில் அவரை வாழ்த்துகின்றோம்.

*திருமறைக் கலாமன்ற மூத்த கலைஞர்களான*

A.V.ஆனந்தன், A.பேக்மன் ஜெயராஜா, CM. நெல்சன், V.J.கொன்ஸ்ரன்ரைன், N.S.ஜெயசிங்கம், A.பாலதாஸ், F.யூல்ஸ் கொலின்ஸ், A.R.விஜயகுமார்.

(37050)(421618)

## கண்ணீர் அஞ்சலி

*எமது தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.சங்கத்தின் தட்டெழுத்தாளர்*

திருமதி **சிவரத்தினராசா ஜெயந்திமாலா**



*அவர்கள் 26.06.2005 ஞாயிற்றுக்கிழமை அமரத்துவமடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும் துயருமடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

தெ.மே.ப.நோ.கூ.சங்கம் (வ து) கைதடி. (ச.43693)(39-16-18-42)

பணிப்பாளர்கள், பணியாளர்கள்.

## கணபதி ஜோதிட நிலையம்

**பண்டிட் ஐயப்ப சாஸ்திரி**

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளார். இவர் கைரேகை மூலம் நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், விவாகப் பொருத்தம், கல்வி, வெளிநாடு செல்லும்வாய்ப்பு, நோய் போன்றவற்றிற்குப் பரிகாரம் கூறுவார். ஒரு முறை சந்தியுங்கள்.

தொடர்பு: **SHAN JAEYA REST HOUSE,**

NO.5, RAKKA ROAD (ICRC Office அருகில்), JAFFNA.T.P.: 077 9173940. (37054)

## INSTITUTE OF INFORMATION TECHNOLOGY

*E_Mail :- I.I.T@wow.lk*
*TP No :- 021 4591920*
*Mobile :- 0773049828, 0773049886*

*RDS Building, K.K.S Road, Mallakam.*

**IIT வழங்கும்**

**மாபெரும் இலவச புலமைப்பரிசில் திட்டம் 2005**

**90% வரை வெல்லுங்கள்**

காலம் : 03.07.2005 (ஞாயிற்றுக்கிழமை)

IIT வழங்கும் கற்கைநெறிகள்....

- Diploma in Software Engineering
- Diploma in Hardware Engineering
- Diploma in Computer Networking
- Diploma in Desk Top Publishing
- Diploma in Web Designing
- Diploma in Video Editing
- Diploma in MS Office
- Certificate in MS Office
- Diploma in Maya
- Internet & E_mail
- Diploma in Advanced Windows Application
- Children Kids
- Network Centered Computer System Engineering (NCSE) - 1 1/2 Years
- Network Centered Multimedia Technology (NCMT) - 1 1/2 Years
- Network Centered Web Curriculum (NCWC) - 1 Years
- Honours Diploma in Hardware and Networking Engineering - 1 Years

Association with: Hi Way Informatics (India)

Validation with: IRISH INTERNATIONAL UNIVERSITY European Union; COMMISSION FOR CONTINUOUS LEARNING UK; LONDON EXECUTIVE SCHOOL UK

## மீண்டும் ஓர் அரிய வாய்ப்பு



**விமானப் பயணக்கட்டணம்–விசேட விலைக்குறைப்பு**

**கொழும்பு - பாங்கொக் - கொழும்பு** ரூபா 15,000 + Tax

**கொழும்பு - டோகா** ரூபா 9,000 + Tax

**கொழும்பு - பிரான்ஸ் / றோம் / சுவிஸ் / ஜேர்மனி** ரூபா 40,000 + Tax

**கொழும்பு - லண்டன் - கொழும்பு** ரூபா 48,000 + Tax

*சுற்றுலா வசதி*

*கொழும்பு - சென்னை*

**ரூபா 23,500/=**

**விசேட சலுகையாக**

- கொழும்பு – சென்னை – கொழும்பு விமானச்சீட்டு
- மூன்று நாள்கள் – இரு இரவு தங்குமிட வசதிகள்
- அரைநாள் நகரச் சுற்றுலா
- விசா இலவசம்

இவை உள்ளடங்கலாக.

**ஏற்கின் ஸ்வென்ஸ் ஓவர்சீஸ் ரவல்ஸ் சேவிஸஸ் பிறைவேற் லிமிட்டட்**

**56/15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

உடன்வரும் அழைப்புகளுக்கு T.P. 0777 915824, 0777 270452, 021 222 3771

(C/43704)(52)

**உங்கள் நம்பிக்கையான பிரயாண முகவர்**

## பதவி வெற்றிடம்

லண்டனில் பல கிளைகளைக் கொண்ட MAK COST CUTTER நிறுவனத்துக்கு யாழ்ப்பாணத்தில் பணியாற்ற மனிதவள ஆளணி முகாமையாளர் பதவிக்கு (Human Resource Management) விண்ணப்பம் கோரப்படுகின்றது. தகைமையுடையவர்கள் LONDON ENGLISH COLLEGE இல.105, அரசடி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு விண்ணப்பத்தினை 04.07.2005 இற்கு முன்கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.

★ ஆண், பெண்/இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
★ வயதெல்லை (30-50)
★ கல்வித் தகைமை:

I. முகாமைத்துவ அல்லது வணிகத்துறைப் பட்டம் (B.B.A. or B.Com.) அத்துடன் மேற்காட்டிய துறையில் 2 வருட முன் அனுபவம் அல்லது
II. ஏதாவதொரு பல்கலைக்கழகப் பட்டத்துடன் மேற்காட்டிய துறையில் 5 வருட முன் அனுபவம் அல்லது
III. G.C.E. A/L வணிகத்துறையில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் மேற்காட்டிய துறையில் 8 வருட முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.

★ பிறதகைமைகள்: Ms Office ஆங்கிலம் பேச, எழுத தெரிந்திருத்தல் வேண்டும்.

(சி-43706)(29-12-14) - நிர்வாகி

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி ராஜஜீவி சுந்தரலிங்கம்
அவர்களின் பாசமிகு தந்தை

### கனகசபை கணேசன்

அவர்களின் மறைவினால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-43696)(29-12-14)

யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை, சாவகச்சேரி. — அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

## 13 ஆம் ஆண்டு நினைவலைகள்



தாயின் மடியில் 16 ~ 09 ~ 1975 — தாயக மண்ணில் 28 ~ 06 ~ 1992

கட்டைக்காடு சமரின்போது வீரச்சாவடைந்த

### லெப். வீரமணி (தீபன்ராஜ்)

செல்வன் குணரத்தினம் ஸ்ரீரஞ்சன்

அண்ணன் அணியில் அரும்பங்காற்றினாய்
அண்ணனிடம் வீரமணி எனும் பெயர் பெற்றாய்
வீரத்தோடு நின்று களம் பல கண்டாய்
மண்ணையே நேசித்து மண்ணிலே வித்தானாய்
*உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி. (சி-43707)(29-12-14) - குடும்பத்தினர்.

## 45 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



### அமரர் செல்லையா சின்னத்தம்பி

(ஏழாலை மத்தி, ஏழாலை)

புகுந்த வீட்டு உறவினராய் என் இல்லம் புகுந்தாய்
என் இல்லம் சிறப்புற அரும்பாடு கொண்டாய்
சேவைகள் பல செய்து என்குடும்பம் காத்தாய்
பிள்ளைகள் அழைப்பது போல 'அப்பா' என்றிடுவாய்
'சின்னண்ணா' என்றழைத்தால் ஓடோடி வந்திடுவாய்
கோயில் தொண்டு செய்ய எனக்கு வலது கரமானாய்
என் மனைவி துயர் கேட்டு துடியாய் துடித்தாய்
உன்பிரிவு கண்டு இன்று துடியாய் துடிக்கின்றது என் குடும்பம்.

அன்னாரின் பிரிவால் துயர்கொண்டுள்ள மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன் என்குடும்பமும் வேதனை துயர் பகிர்ந்து கொள்கிறது.

'ஜனனோதயம்' (37072)(29-12-14)
செல்வராஜா அவனியூ
அம்மன் றோட், திருநெல்வேலி.

தாங்கொணாத்துயரில்
செ.சிவலிங்கம் குடும்பம்.

## தவறிவிட்டது

சங்கானையிலிருந்து சங்குவேலி ஊடாக சுன்னாகத்திற்கு இடையில் சிறிய பையுடன் நகை தவறிவிட்டது. (சிவப்பும் பச்சையும் சார்ந்தது) கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

கார்த்திகா (43769)(29-12-14)
9/1, ஐயனார் கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 0773155624

## விற்பனைக்கு

எம்மிடம் சகல அளவுகளிலும் Brown Paper Bags விற்பனைக்கு உண்டு.
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (சி-43699)(29-12-14)

ஸ்ரீ லங்கா புத்தகசாலை
234, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள, பாவித்த SUZUKI G.S 125 மோட்டார்சைக்கிள் சகல ஆவணங்களுடனும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: (சி-43700)(29-12-14)
234, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

## COLLEGE OF ENGLISH

பிறவுண்வீதி யாழ்.

A/Lபரீட்சைக்குத் தோற்றியோர்/ஏனையோர் ஆறே மாதத்தில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**

**By: Mr.T.THANENDRAN** S.L.T.S. 2-II
B.Com, H.N.D.A., P.G.Dip in Edu.

புதிய பிரிவு ஆரம்பம்: 02.07.2005 சனி 5.30 p.m.

★ **O/L English Paper Class**

ஆரம்பம்: சனி 4.30 p.m. (37067)(29-12-14)

தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் இணையலாம்.

## மரண அறிவித்தல்

### சிவக்கொழுந்து சற்குணராசா



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் பாண்டியந்தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து சற்குணராசா 25.06.2005 சனிக்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்து - இரத்தினத்தின் அன்பு மகனும் பிரான்சிஸ், திரேசம்மா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மருமகனும் ஜெயசீலியின் அன்புக் கணவரும் குணசீலன் (லண்டன்), அனுசியா, ஜெயசலா ஆகியோரின் அன்புத் தந்தையும் அன்ரனி, அல்பிறட், மெற்றலின், றோஸ்மலர், வேதநாயகம் (பிரான்ஸ்), வசந்தகுமார் (பிரான்ஸ்), கிளேற்றா ஆகியோரின் மைத்துனரும் தேவமலர், நாகேஸ்வரி, காலஞ்சென்ற டேவிட், மார்க்கண்டு, வசந்தி (பிரான்ஸ்), கொலஸ்ரிக்கா (பிரான்ஸ்), தேவதாஸ் (ஆசிரியர்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (28.06.2005) செவ்வாய்க்கிழமை புனித அன்னம்மாள் ஆலயத்தில் பிற்பகல் 3 மணிக்கு நல்லடக்கத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குணசீலன் (மகன்)

*இல.70/5, கொழும்புத்துறை வீதி,*
*பாண்டியந்தாழ்வு,*
*யாழ்ப்பாணம்.*
*T.P.: 021 2226118* (37073)(29-12-14)




கொழும்புத்துறை, ஜூன் 28

யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் இன்றும் நாளையும் மாலை 5 மணி தொடக்கம் நள்ளிரவுவரை இறைதியான நற்கருணை வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

அருட்திரு. போல் றொபின்சன் அடிகளாரின் தலைமையில் இவ் வழிபாடுகள் நடைபெறும்.

இதேவேளை, கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தில் இறையோருக்கான சிறப்பு வழிபாடு நாளை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை நடைபெறும். (ஒ-30-17-203)

★ ★ ★

யாழ்ப்பாணம் வண்.கிழக்கு, கந்தர்மடம் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா கடந்த 25ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இதில் தினமும் மாலை 6 மணிமுதல் 7 மணி வரை ஆன்மீகப் பேருரை நடைபெறும். (ஒ-13)

★ ★ ★

குப்பிளான், சொக்கவளவு சோதிவிநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழா நடைபெறும்.

திருவிழாக் காலங்களில் தினமும் மாலை 7 மணிக்கு 'விநாயகர் வழிபாடு' எனும் பொருளில் வலிகாம கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் சைவப்புலவர் கந்தசத்தியதாசன் தொடர் சொற்பொழிவாற்றி வருகின்றார். (ஒ-13)

## NEW SCIENCE CENTRE யாழ்நகர்

**A/L DAY CLASS** — கணித, விஞ்ஞான பிரிவு

CHE. - திரு. அன்பழகன்
PHY. - திரு. ஜெயசீலன்
திரு. பிரபா
Maths. - திரு. கோணேஸ்
BIO - திரு. அல்போன்ஸ்

ஆரம்பம்: 01.07.2005
வெள்ளி 9.30 P.m.

(சி-43708)(29-12-14)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னையா சுவாமிநாதன்



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா சுவாமிநாதன் (சாமியார்) நேற்று (27.06.2005) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா (ஓய்வு பெற்ற வட்டாரக் கல்வி அதிகாரி), காமாட்சிப்பிள்ளையின் சிரேஷ்ட மகனும் காலஞ்சென்ற ஸ்ரீ அப்பாசாமியின் சகோதரனும் திருமதி செல்லம்மாள் - இராஜரட்ணம் ஆமரர்களான சிவசுப்பிரமணியம், திருமதி நீலாயதாட்சி அம்பலவாணர் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பங்களா ஒழுங்கை, மல்லாகம் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டுப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பங்களா ஒழுங்கை,*
*மல்லாகம்.* (37066)(29-12-14)

தகவல்:
குடும்பத்தினர்.

### கந்தையா இராசையா



கோண்டாவில் கிழக்கு, கோண்டாவிலைச் சேர்ந்தவரான கந்தையா இராசையா அவர்கள் நேற்று (27.06.2005) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கந்தையா - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும் கந்தையா - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் குலேந்திரன், லலிதா, றஞ்சினி (சுவிஸ்), விக்கினேஸ்வரன், மகாலிங்கம் (றஞ்சன்), சிறிகாந்தன் (கனடா), வசந்தா (கனடா), பாமினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் றஞ்சிதமலர், மகாலிங்கம் (சுவிஸ்), கருணாகரன் (சுவிஸ்), றஞ்சினி, சுலோசனாதேவி, மாலினி (கனடா), நந்தகுமார் (கனடா), காந்தரூபன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் திலீபன், திலீபா, கபிலன், சுதர்சன், கஜனி, நளாயினி, ரேமிதா, கோபிகா, வினோதன், ஆர்த்தி (ஆஷா), ஜெஸ்மினா, ஜெதீஸ்வரன், நிரோசன், நிவாசன், கிரிசோபன், திலக்சன், அருண், அனுசிகா, அபர்ணா, ஐங்கரன், சிபானா, நிஷானா, சிவானந்தன், அகிதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையால் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பத்மநாப வீதி,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.* (37062)(29-12-14)

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்.


உள்நாட்டு வெளிநாட்டிற்கான சிறியதோ,பெரியதோ,
எந்த அளவுகளிலான பொதிகள், கடிதங்களை
எந்த நாட்டிற்கும் எந்தநேரமும் துரிதமாகவும்
குறைந்த கட்டணத்தில் அனுப்பிட

மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு விசேடசலுகை

லண்டனுக்கான 5 Kg பொதிக்கு
1 Kg க்கான கட்டணம் 500/=

திருமுருகன் கொம் நெற்

259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
(Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
(பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310

36, செல்லப்பிள்ளையார் கட்டடம்,
பிரதான வீதி, நெல்லியடி,
கரவெட்டி.
Tel - 021 226 4252
Fax - 021 226 4253

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
விக்ராந், லக்ஷ்மிராய், வடிவேலு நடித்த
கற்க கசடற (ரீலஸ்)
காட்சிகள்:
11.00. 3.00. 6.00 (பு.நே.)

தேவை
எமது நிறுவனத்துக்கு
1. விற்பனையாளர் (வயது 18-25)
2. கணக்காளர் (வயது 25-35)
ஆகியோர் தேவைப்படுகின்றனர்.
நேரில் வரவும்.
(சி-43698)(29-12-14)
தொடர்பு:
ஸ்ரீ லங்கா புத்தகசாலை
234, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

நாதன்ஸ் சினிமா
வெள்ளித் திரையில் பத்ம ஸ்ரீ பாடகர் ஹரிகரன் அறிமுகம், குஷ்பூ, ரியாஸ்கான் நடித்த
பவர் OF WOMAN (ரீலஸ்)
கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
(சி.43363)

ராஜா யாழ்ப்பாணம்
ரஜனிகாந்த், பிரபு, ஜோதிகா,
நயன்தாரா, வடிவேல் நடித்த
சந்திரமுகி (ரீலஸ்)
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)

# நீதிமன்ற வளாக கட்டுமானப் பணியை ஒக்ரோபருக்குள் முடிக்கப் பணிப்பு!

## யாழ்.வந்த திட்டப்பணிப்பாளர் விடுத்தார்

யாழ்ப்பாணம், ஜுன்28

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுவரும் நீதிமன்ற வளாகக் கட்டடப் பணிகளை எதிர் வரும் ஒக்ரோபர் மாதத்துக்கு முன் பூர்த்தி செய்ய வேண்டும் எனக் கட்டட ஒப்பந்தகாரர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

சட்ட, நீதி மறுசீரமைப்பு திட்டத்தின் தலைவரும் திட்டப்பணிப்பாளருமான சுமித்திரா குணவர்த்தன இந்தப்பணிப்புரையை விடுத்துள்ளனர்.

நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த அவர் நீதிமன்ற வளாகக் கட்டடங்களின் முன்னேற்றம் குறித்து ஆராய்ந்தார்.

யாழ். நீதிவான் ஆர். ரி. விக்னராஜாவுடன் கலந்துரையாடிய அவர் பின்னர் நீதி மன்ற வளாகப் பகுதிக்கு சென்று அங்குள்ள நிலைமையை நேரில் பார்வையிட்டார்.

இக்கட்டடப்பணிகள் ஆரம்பிக்கப்படும் போது கட்டடப்பணிகளை ஒக்ரோபர் 6ஆம் திகதிக்கு முன் பூர்த்தி செய்யப்படவேண்டும் என இணக்கம் காணப்பட்டிருந்தது என்றும் அதன்படி கட்டடப்பணிகள் பூர்த்தி செய்யப்படவேண்டும் என்றும் அவர் கட்டட ஒப்பந்தகாரருக்கு தெரிவித்தார்.

நீதிமன்றப் பணிகளுக்கான தளபாடங்கள், உபகரணங்கள் ஆகியவற்றின் தேவை குதித்தும் அவர் ஆராய்ந்தார். (ஒ-3)

## தாலிக்கொடி அபகரிப்பு!

தென்மராட்சி,ஜுன்28

பட்டப்பகலில் வீதியில் நடந்துசென்ற பெணின் 10 பவுண் தாலிக்கொடி மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் அபகரிக்கப்பட்டது.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி டச்சுவீதி புளியடிச் சந்தியில் இடம்பெற்றது.

சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த உமாதேவி என்னும் பெண்ணே தாலிக்கொடியை பறிகொடுத்தவராவார்.

இச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ஒ-31-117)

## போராளிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினர் எமது போராளிகள் பயணம் செய்த வாகனத்தில் இருக்கவில்லை என்பது எமக்குத் தெரியவில்லை. சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு இரு புறத்திலும் இருந்த காவல் நிலைகளில் இராணுவத்தினர் கடமையில் நின்றபோதும் சம்பவம் இடம்பெற்ற பின்னர் அவர்கள் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது. இந்தப் போக்குவரத்து நடவடிக்கை தொடர்பான விடயங்கள், தொடரணி எத்தனை மணிக்குத் தாக்குதல் நடந்த இடத்திற்கு வரும் மற்றும் பயணிக்கும் வாகனத்தின் வகை என்பன தொடர்பான தகவல்கள் அனைத்தும் இராணுவத்தினருக்கு மட்டுமே தெரிந்திருந்தன.

விடுதலைப் புலிகளின் போக்குவரத்துத் தொடர்பாக ஏற்கனவே தமக்கு அறிவிக்கப்பட்டு, அதற்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால் இந்தக் கொலைகள் தவிர்க்கப்பட்டிருக்கும் என மட்டு. - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்படப் போராளிகள் கொலைசெய்யப்பட்டபோது இராணுவப் பேச்சாளர் தயா ரத்னாயக்க கூறியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது இதனடிப்படையில், விசாரணைகளை மேற்கொண்டு தற்போது நடத்தப்பட்ட தாக்குதலின் உண்மை நிலையினை எமக்கு வெளிப்படுத்தவேண்டும் என நாம் கண்காணிப்புக் குழுவினரிடம் கேட்டுக் கொள்கிறோம்.

- என்று தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

## மட்டு. அம்பாறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பித்திருந்தன. இப்பகுதிகளில் அரச, அரசசார்பற்ற அலுவலகங்கள், வங்கிகள், பாடசாலைகள், சந்தைகள், கடைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. போக்குவரத்துக்கள் முற்றாகத் தடைப்பட்டிருந்தன. வீதிகள் ஆள்நடமாட்டம் இன்றி வெறிச்சோடிக்கிடந்தன.

இந்தக் ஹர்த்தாலின் ஒரு பகுதியாக காத்தான்குடியில் நேற்று முஸ்லிம்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தையும், ஊர்வலத்தையும் நடத்தினர்.

முன்னாள் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தலைமையில் இந்த ஆர்ப்பாட்டமும், கண்டன ஊர்வலமும் நடைபெற்றன.

காத்தான்குடி பிரதான நுழைவாயிலில் ஆரம்பமான கண்டன ஆர்ப்பாட்டம் பிரதான வீதி வழியாகச் சென்று முகைதீன் ஜும்ஆப் பள்ளிவாசல் முன்றிலில் முடிவடைந்து அங்கு கண்டனக் கூட்டம் நடைபெற்றது. (க)

## 'ரவியன்'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டாவது கலந்துரையாடலிலும் - மனோ தித்தவெல கலந்துகொண்டார்.

யாழ். அரச அதிபர் கே.கணேஸ் இக்கலந்துரையாடலகளில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், விடுதலைப் புலிகளின் தரப்புப் பிரதிநிதி, படைத்தரப்புப் பிரதிநிதி உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் மீள்கட்டுமானப் பணிகள் தொடர்பாக அப்போது விரிவாக ஆராயப்பட்டன.

மீள்கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கைகளும் இச் சந்திப்பின்போது கைச்சாத்திடப்பட்டன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் -

பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் - அரச அதிபர் கோரிக்கை விடுத்தார்.

இச்சந்திப்பை அடுத்து துன்னாலை கிழக்கு, மணற்காடு ஆகிய இடங்களில் உள்ள தற்காலிக வீடுகளையும் -

மணற்காட்டில் அமைக்கப்படும் நிரந்தர வீடுகளையும் - குழுவினர் நேரடியாகப் பார்வையிட்டனர். (ஒ-3)

## பொதுக்கட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அக்கட்சியின் பேச்சாளரும், எம்.பியுமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் வெளியிட்டிருக்கின்றார்.

நேற்றுக்காலை கொழும்பு கேம்பிரிட்ஜ் பிளேஸில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவரின் இல்லத்தில் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே பேராசிரியர் பீரிஸ் இதனைத் தெரிவித்தார். (க)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரகாசம், வண. ஜெபநேசன். இவர்களின் பதவிக்காலம் எதிர் வரும் முதலாம் திகதி முதல் மூன்று வருடங்களாகும். (ஒ-3)

## பொதுக்கட்டமைப்பு உடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாளர் சண்முகலிங்கம் ரஞ்சன் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மேற்படி மனுதாரர் ஆழிப்பேரலைத் தாக்கத்தில் ஆறு லட்சம் ரூபா பெறுமதியான உடைமைகளை இழந்தவர் எனக்கூறப்பட்டது.

தமது மனுவில் அவர் சுட்டிக்காட்டிய முக்கிய அம்சங்கள் வருமாறு:-

அரசமைப்பின் 52(2) ஆவது பிரிவின்படி மேற்படி ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் அதிகாரம் முதலாம் மனுதாரரான அமைச்சுச் செயலாளருக்கு இல்லை.

அரசமைப்பு ஏற்பாடுகளின்படி புலிகள் போன்ற ஓர் அமைப்புடன் அரசு இத்தகைய உடன்பாடு செய்வதும், நிதி கையாள்வதைப் பங்குபோடுவதும சட்டவிரோதமானவை.

அரச முகவர் அமைப்பு அல்லாத ஒன்றிடம் அரச நிதியைக் கையாளும் பொறுப்பை ஒப்படைக்க அரசுக்கு அதிகாரம் இல்லை.

எனவே, இந்தப் பொதுக்கட்டமைப்பு உடன்பாடு செயற்படுத்தப்படுவற்கு எதிராக உடனடியாகவே ஓர் இடைக்காலத் தடை உத்தரவை விதிகும்படியும் - விடயத்தை விசாரித்து, இந்த உடன்படிக்கை சட்டவிரோதமானது என அறிவிக்கும்படியும் - கோருகின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## சிவராம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குமுதேஷ், கே.ஜி.சுனில் மற்றும் ஓட்டோச் சாரதியான ரஞ்சித் ஆகிய சாட்சிகள் சந்தேகநபரை அடையாளம் காட்டுவதற்காக அடையாள அணிவகுப்பிற்கு அழைக்கப்பட்டிருந்தனர். ஆனால், ஓட்டோச்சாரதி ரஞ்சித் நேற்று நீதிமன்றத்தில் ஆஜராகாததால் அடையாள அணிவகுப்பு 5ஆம திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (க)


ஆங்கில நேரடி வகுப்பு
A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான வகுப்புக்கள்
பாடச்சலுகைக் கட்டணம் ரூ. 3000/-
3 மாத பயிற்சி நெறியில் இணையும் போது ரூ.1000 இற்கும் பயிற்சி நெறி முடிவில் ரூ.2000 இற்குமான புத்தகங்களும், CD யும் இலவசம்.
SAAMSTECH
841,HOSPITAL RD,JAFFNA , 021-459157

SPECIAL OFFER 50% Discount
Softview Computer College
(Authorised Councelling Centre for Queen's Park College, London. A joint Venture with Arom Menporulagam Ltd., India.)
43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna, Sri Lanka.
T.P: 021 2225170, 0777846811

| COURSE | DURATION | FEES |
| --- | --- | --- |
| Diploma in Microsoft Office | 5 Months | 875/= |
| Diploma in Desktop Publishing | 4 Months | 1375/= |
| Diploma in Computer Programming | 8 Months | 2800/= |
| Diploma in Hardware Engineering | 4-5 Months | 1800/= |
| Diploma in Network Engineering | 4 Months | 2850/= |
| Diploma in Visual Basic | 4 Months | 1375/= |
| Diploma in Computer Science | 4 Months | 1375/= |
| Diploma in AutoCAD | 4 Months | 1375/= |
| Diploma in C++ | 4 Months | 1375/= |
| Diploma in Internet E-Mail | 2 Months | 750/= |

பயிற்சி நெறிகள் ஆரம்பம்:- 02,06.07.2005
உங்கள் பதிவுகளை இன்றே முன்பதிவு செய்து கொள்ளுங்கள்

BRIGHTMAN
நாவலர் வீதி, யாழ்நகர்.
A/L -2006
பௌதிகம் புலங்கள்
By:ஜெயசீலன்
ஆரம்பம்: 29.06.2005 (WED.) 3 p.m.

கணக்கீடு
திரு.பாலவாசன்
A/L-2007
தொங்கல் கணக்கு
புதன், வெள்ளி 5 - 6
ஆரம்பம்: 29.06.2005 5 p.m.
D.C.M.
யாழ்நகர்
(37014)(29-12-15)

உங்கள் எதிர்காலத்தை வளமாக்கும் தொழில்சார் கற்கை நெறியை இன்றே தெரிவு செய்யுங்கள்
aat, CMA & CAT
அனுமதிக்கு முந்துங்கள் 100% FREE
விரிவுரைகள் ஆரம்பம் 09.07.2005 - 10.00 a. m.
அலுவலக நேரம்:- திங்கள், புதன், வெள்ளி, 10.00 a.m. - 2.00 p.m
சனி, ஞாயிறு 8.30 a.m. - 3.30 p.m.
Note: மாணவர்கள் O/L Result Sheet கொண்டு வருதல் வேண்டும்.
for 2005 A/L Batch (only for 75 Students)
யாழில் தொழில்சார் கற்கை நெறிகளின் முன்னோடிகள்
Career. Com Institute
167, 1st, Cross, Street, Jaffna.
(வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)
T.P: 077- 3039448, 077- 6238260
(C/43675) (54)

MCS
ஐ.நா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப் பயிற்சித் திட்டம் ஒன்றை முன் வைத்துள்ளார்கள்.
பதிவுகள் 02/07/2005 இற்கு முன் நேரில்
இலவசக்கணனிப்பயிற்சி
324, பலாலிவீதி, யாழ்ப்பாணம் (ஆலடிச்சந்தி அருகே, மேல்மாடியில்)
Supported By UNDP/JRRP


## மரண அறிவித்தல்

### திருமதி செல்வராசா பத்மாவதி

(சங்கானை)

வல்லை வீதி, சங்கானையைச் சேர்ந்த திருமதி செல்வராசா பத்மாவதி நேற்று (27.06.2005) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: ந. செல்வராசா (கணவன்), பிள்ளைகள்.

தொலைபேசி இல: 0112540301 (கொழும்பு) (சி-43711)(29-12-15)


Confirm Your Computer Knowledge ! X
Are You Sure You Have the enough Computer Knowledge?
இல்லையா? கவலையை விடுங்கள், இன்றே இணையுங்கள் எம்முடன்...
IMIS - UK, ICM - UK approved Training Center

50% OFF
GLOBAL VILLAGE COMPUTER EDUCATION
( The Leading INDIAN IT College )
Free Books
புதிய பிரிவுகள் ஆரம்பம்: 03-07-2005
10:00 a.m, 3:00 p.m, 7:00 p.m
Jaffna District Franchise:
eTouch COMPUTER SYSTEM
விபரங்களுக்கும் விசாரணைகளுக்கும்
உடுவில் வீதி, மருதனார்மடம், யாழ்ப்பாணம்.
Phone: 021-4590222 E-Mail: etouch@wow.lk Web: www.globalvillage-lanka.com


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.06.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.